# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

மலர்: XI இதழ்: 12 | ஜூன் 2025 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: XI Issue: 12 | June 2025 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20




நீயும் நானும்!
நீயா நானா?
- ஆசிரியர் கடிதம்

நகை அடகு
விதிமுறை:
நடுத்தர வர்க்கம்
பாதிக்கப்படுமா?

மனித
உரிமைகளை
அறிவோமா?

பா.ம.க.
கடந்து வந்த
பாதை

தன்னைப் போல பிறரை
நினைப்பவர் எம்ஜிஆர்!
- ஆரூர்தாஸ்

அடுத்தடுத்து மாறும் அரசியல் காட்சிகள்:
தமிழக அரசியலில் தலைகீழ் மாற்றம் வருமா!

# DIET REGULATION:
# - Importance to the Health!

A healthy diet prevents malnutrition and protects from diseases like obesity, heart disease, diabetes, cancer and stroke. Today, many people's diets consist of more saturated fat, trans fats, sugars, and more sodium than fruits, vegetables and dietary fiber. Your body's health reflects what you put into it.

Eating a poor diet reduces physical and mental health because eating healthy allows people to be more active. Two-thirds of people who eat fresh fruit and vegetables daily report no mental health issues, as reported by the Mental Health Foundation. Compare this to those who do have some level of mental health problems and have generally reported eating less healthy foods and more unhealthy foods. Feelings of well-being can be protected by ensuring that our diet is full of essential fats, complex carbohydrates, vitamins and minerals.

Eating a nutritious diet filled with fruits, vegetables, whole grains, dairy and protein will help maintain a healthy body weight.

Janelle Hodovic, a Registered Dietician with UnityPoint Clinic - Weight Loss, says this about nutrition, "there is no one diet, no diet pill and no surgery that lets people eat whatever they want and still expect weight loss and improved health. Maintaining a healthy diet and exercise program will be what is needed to achieve those goals. Use food for its purpose: nourishment."

If eating healthy makes you think about the food you can't have, refocus your thoughts on the foods you can have. Put a new spin on an old recipe to make it a little healthier. You don't have to give up your favorite comfort foods; it's all about balance. Adding a variety of fruits and vegetables to meals can help you control your weight, blood pressure and cholesterol.

Our immune system is our defense against disease, but poor nutrition is the most common cause of immunodeficiencies worldwide. Maintaining your immune system requires an intake of proper vitamins and minerals. Eating a well-balanced diet,



including fruits, vegetables and food low in fats, will help support a healthy immune system.

Foods like tomatoes, berries, avocados, nuts and fish all contain certain vitamins and minerals that are good for the skin. For example, tomatoes contain vitamin C, which helps build collagen, in turn making your skin look firmer and slow premature aging. Berries are full of antioxidants and vitamins and eating them promotes cell regeneration for new skin.

Our bodies derive energy from the foods and liquids we consume. The main nutrients our body uses for energy are carbohydrates, fats and protein. Carbohydrates such as whole-grain breads and starchy vegetables are the best for prolonged energy since they are digested at a slower rate. Water is necessary for transport of nutrients, and dehydration can cause a lack of energy. A deficiency in iron may cause fatigue, irritability and low energy. Food rich in iron includes seafood, poultry, peas and dark green leafy vegetables such as spinach. To better absorb iron from these foods, it is best to consume vitamin C at the same time. Think of including vitamin C rich foods like broccoli, kiwi, peppers, leafy greens and tomatoes in meals full of iron. So we must know about awareness on diet to protect our life.



Concept by:
S.SHRUTHI LAKSHMI
B.Sc., (psychology)

ஆசிரியர் கடிதம்

# நீயும் நானும்! நீயா நானா?

அன்புடையீர் வணக்கம்!


நீயா நானா என்ற நிகழ்ச்சியை விஜய் டிவியில் நடத்தும் கோபிநாத் அமெரிக்கா சென்ற போது நீயும் நானும் என்ற நிகழ்ச்சியை நடத்தி இருக்கிறார் அதில் நம்முடைய செய்தி செய்தியாசிரியர் விடாரண்யம் கலந்து கொண்டார். "அமெரிக்கா வந்து உள்ளீர்களே உங்க அனுபவம் எப்படி இருக்கிறது" என்று கோபிநாத் கேட்டிருக்கிறார்.

மகன் வீட்டுக்கு வந்திருக்கிறேன் சந்தோஷமாக இருக்கு, மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

இது தந்தைக்கும் மகனுக்கும் உள்ள உறவின் பெருமையை குறிப்பிடுகிறது.

உறவுகளின் ஆரம்பம் "நீயும் நானும்" என்று தொடங்குகிறது. அது ஒரு கட்டத்தில் "நீயா நானா "என்று மாறிவிடுகிறது. பிறந்த போது தனியாக பிறந்த மனிதன் எந்த சூழ்நிலையிலும் வாழும்போது தனிமனிதனாக வாழ்ந்து விட முடியாது. குடும்பமாகக் கூடி வாழ்ந்தால் தான் மனித இனத்தின் அனைத்துத் தேவைகளும் நிறைவேறும். குடும்பம் என்பது மனித வாழ்வின் அஸ்திவாரம். குடும்ப அமைப்பு என்பது கணவன், மனைவி, பெற்றோர், உடன்பிறப்புகள், மகன்கள், மகள்கள் ஆகியோர் ஒற்றுமையாக, அன்புநெறி தவழ வாழும் முறையாகும்.

இவர்களுடன் பெற்றோரின் உடன்பிறந்தார், மருமக்கள் போன்ற சுற்றமும் சேர்ந்து விரிந்த உறுப்பினர்கள் ஒன்று கூடியும் வாழும் அமைப்பும் சில குடும்பங்களில் இருக்கும்.



எண்ணம்

குடும்ப வாழ்க்கையில் கணவனும், மனைவியும் ஒருவர்க்கொருவர் துணை என்ற உயர் எண்ணம் இல்லற உறவுக்கு நன்மருந்து. குடும்ப உறவு என்பது சுமையாக இருக்கலாம். ஆனாலும் அது சுகமான சுமையே. அன்பு என்னும் நூலால் பின்னப்பட்ட உறவு வலையே குடும்ப உறவு. குடும்பத்தினரிடம் அன்பைப் செலுத்துவதும் பிரச்னைகளை மனம்விட்டுப் பேசித் தீர்த்துக்கொள்வதும் நல்ல குடும்ப அமைப்புக்கு அழகு.

குடும்ப அமைப்பு வலுவாக இருந்தால் அது சமுதாயத்தையும் நாட்டையும் வலுப்படுத்தும்.

இன்றைய நவீன உலகில் வாழ்வாதாரத்திற்காக, பிறந்த மண்ணை விட்டு வெவ்வேறு இடங்களில் பணியாற்றுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக இருப்பது அரிதாக உள்ளது. குடும்ப கட்டமைப்பிலும் 'விரிசல்' உருவாகிறது.

வெளி நாடுகளில் இருப்பவர்கள் என்னதான் குடும்பத்திற்கு வருமானத்தை அங்கிருந்து அளித்தாலும், உற்ற நேரத்தில் அருகில் இல்லாதது அவர்கள் குடும்பங்களுக்கு ஏமாற்றமாகவே இருக்கும். பணம் சம்பாதிப்பது மட்டுமே முழுமையான திருப்தியாக வாழ்வில் இருந்து விட முடியாது. பாச உறவுகள் பெற்றோருடன் கூடியிருந்து அன்பைச் செலுத்துவதற்கு ஈடு இணை ஏதுமில்லை.

ஒருவர் எந்த சூழ்நிலையிலும், எந்த வயதிலும், எவருக்காகவும்,



குடும்பத்தைக் கைவிடாமல் ஆதரவளிக்க வேண்டும்.

கணவன், மனைவி, அப்பா, அம்மா, பெற்றோர் பிள்ளைகள், மாமா தாய்மாமா, அத்தை, அண்ணன், அண்ணி, அக்கா, தம்பி, தங்கை, சித்தப்பா, பெரியப்பா, நாத்தனார், கொழுந்தனார், மாமனார், மாமியார், மருமகன், மருமகள், தாத்தா, பாட்டி, பேரன், பேத்தி என வரும் உறவுகள் நம்முடைய கலாச்சாரம் பண்பாட்டை உறுதி செய்தவை.

தொழில்நுட்பம் வளர்ந்தாலும் உறவுகள் வளர்ந்தால் தான் மனிதனுக்கு மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

குடும்பத்துக்கு மட்டுமல்ல சமூகத்தில் குறிப்பாக அரசியலில் உறவுகள் வலுப்பெற வேண்டும்.

மு.க.அழகிரி குறித்து அவரது தந்தை கலைஞரும் அன்பு மணி குறித்து அவரது தந்தை டாக்டர் ராமதாஸ் தெரிவிக்கும் கருத்துக்கள் அரசியலுக்கு வேண்டுமானால் அது சரியாக இருக்கலாம் தவிர குடும்ப உறவுகளுக்குள் அது நிச்சயமாக பாதிப்பை ஏற்படுத்தும்.

நீயும் நானும் என்று தொடங்குகிற உறவுகள் ஏன் நீயா நானா என்ற சூழலுக்கு தள்ளப்படுகிறது என்பதை நாம் ஆராய வேண்டும்!

அந்த சூழலுக்கு போகாத அளவுக்கு இருக்க வேண்டுமானால் சில நடைமுறைகளை நாம் பின்பற்றி ஆக வேண்டும் .பல்வேறு புத்தகங்களில் இது பற்றி சொல்லப்பட்டிருந்தாலும் பல்வேறு அறிஞர்களும் அறிவுரை கூறியுள்ளனர்.

இருப்பினும் வேதாந்திரி மகரிஷி சொன்னதை மனதில் பதிவைத்துக் கொள்ள வேண்டும். நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) வை விடுங்கள்.

அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள் (Loose Talks). எந்த விஷயங்களையும் பிரச்னைகளையும் நாசூக்காக கையாளுங்கள் (Diplomacy). விட்டுக் கொடுங்கள் (Compromise).

சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள் (Tolerance).

நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் என்று உணருங்கள் (Adamant Argument) குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்

(Narrow Mindedness).

உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள் (Carrying Tales).

மற்றவங்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள் (Superiority Complex).

அளவுக்கு அதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படா தீர்கள் (Over Expectation). எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்மந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexibility)

மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள் (Mis understanding).

மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும் இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesy).

புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள். பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும், பண்பையும் காட்டுங்கள். அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.

பிரச்னைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.இதை மனதில் பதிய வைத்துக் கொண்டால் மட்டுமே வாழ்க்கை முழுவதும் நீயும் நானும் என்ற உறவு தொடரும்.

**- எம்.எஸ். மூர்த்தி**

# உள்ளே...




**அடுத்தடுத்து மாறும் அரசியல் காட்சிகள்: தமிழக அரசியலில் தலைகீழ் மாற்றம் வருமா!** 6



**65 வருட சினிமா பயணத்தைத் தொடர்ந்து, எம்.பி. ஆனார் கமலஹாசன்!** 10



**இரக்கம் காட்டியதன் விளைவு!** 16



**கொரோனா உடலை பிரேத பரிசோதனை செய்த சிங்கப்பூர்!** 23



**மலையளவு பெறுவதற்கு போராடு! கடுகளவு கிடைத்தாலும் கொண்டாடு!!** 43



**ஒவ்வொரு நொடியும் அழகானது! உறவுகளோடு ஒன்றி வாழ்வோம்!!** 49

# அடுத்தடுத்து மாறும் அரசியல் காட்சிகள்:

# தமிழக அரசியலில் தலைகீழ் மாற்றம் வருமா!

2026 தேர்தல் நெருங்க நெருங்க தமிழக அரசியல் அடுத்தடுத்து களங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. குறிப்பாக அமித்ஷா சென்னை வந்து எடப்பாடி பழனிசாமியை பக்கத்தில் வைத்துக் கொண்டு ,அதிமுக பாஜக கூட்டணியை உறுதி செய்துவிட்டு டெல்லி சென்ற பிறகு இன்று வரை பரபரவென அரசியல் காட்சிகள் அரங்கேறி கொண்டே இருக்கின்றன. ஏப்ரல் மாதம் 11ஆம் தேதி செய்தியாளர் சந்திப்பில் இடது புறம் பாஜக தலைவர் அண்ணாமலையையும் வலது புறம் எடப்பாடி பழனிசாமியையும் வைத்துக் கொண்டும் உறுதி செய்த அமித்ஷா"தேசிய அளவில் மோடி தலைமையிலும், மாநிலத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலும் கூட்டணி அமைக்கப்படும். பாஜக, அதிமுக தலைவர்கள் ஒன்றாக இணைந்து வரும் தேர்தலில் கூட்டணியில் போட்டி. வரப்போகும் தேர்தலில் அதிமுக பாஜக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும்" என நம்பிக்கை உள்ளதாக மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா கூறிவிட்டு சென்றார்.

இந்தக் கூட்டணியை அறிவிப்பதற்கு முதல் நாள் அதாவது ஏப்ரல் 10ஆம் தேதி திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் டாக்டர் ராமதாஸ் ஒரு பரபரப்பு தகவலை வெளியிட்டார்.

"2026 சட்டப்பேரவைத் தேர்தலில் பாமகவின் வெற்றியைக் கருத்தில்கொண்டும் பல்வேறு செயல்திட்டங்களை வகுத்துள்ளேன். அதனை செயல்படுத்தவேண்டி கட்சி அமைப்பில் சில மாற்றங்களை செய்ய முடிவெடுத்துள்ளேன். அந்த முடிவின்படி பாமகவின் தொடங்கிய நான் நிறுவனர் என்பதோடு நான் இனி கட்சியின் தலைவாரகவும் செயல்பட முடிவெடித்துள்ளேன்.

2026 சட்டப்பேரவை தேர்தல் வெற்றிக்காக உழைக்கவேண்டும் என்பதற்காக கட்சியின் தலைவர் பொறுப்பில் இருந்த அன்புமணி ராமதாஸை கட்சியின் செயல் தலைவராக நியமனம் செய்கிறேன்"என்று அறிவித்த உடன் பாட்டாளி மக்கள் கட்சியில் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

அதிமுக கூட்டணியை அறிவித்த கையோடு பாட்டாளி மக்கள் கட்சியை கூட்டணியையும் அதன் தலைவரான டாக்டர் அன்புமணி ராமதாஸ் பக்கத்தில் அழைத்து பாமக கூட்டணியை உறுதி செய்ய அமித்ஷா முடிவு செய்த நேரத்தில் அதை தெரிந்து கொண்டு டாக்டர் ராமதாஸ் இப்படி ஒரு முடிவு எடுத்தார் என்று அரசியல் நோக்கர்கள் விவாதித்தார்கள். கடந்த மூன்று நாட்களுக்கு முன்னால் டாக்டர் ராமதாஸ் அளித்த பேட்டி அதை உறுதி செய்யும் விதமாக இருந்தது. அதாவது கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது தான் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து போட்டியிட நினைத்ததாகவும் ஆனால் சௌமியா அன்புமணி



அண்ணாமலையுடன் பேசி பா.ஜ.கவுடன் கூட்டணி முடிவு செய்து விட்டார் என்று குற்றம் சாட்டினார். அதோடு காலையில் எழுந்து வெளியே வரும் போது பாரத் மாதா கி ஜே என்ற குரல் வீட்டு வாசலில் கேட்டவுடன் தான் வேதனைப்பட்டதாக குறிப்பிட்ட டாக்டர் ராமதாஸ் அந்தக் கூட்டணியில் தான் முழு மனதின்றி என்று சம்மதித்ததாக தெரிவித்தார்.

அதைத்தொடர்ந்து மே மாதம் 11ஆம் தேதி மாமல்லபுரம் வன்னியர் சங்க சித்திரை முழு நிலவு மாநாடு நடந்து முடியும் வரை பாட்டாளி மக்கள் கட்சியில் எந்த சலசலப்பும் இல்லை ஆனால் அது நடந்து முடிந்த பின்னால் தற்போது டாக்டர் ராமதாஸ் அவர்களுக்கும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும் இடையே இடைவெளி அதிகமாகின்ற அளவுக்கு தொடர்ந்து மாற்றங்களை கொண்டு வருகின்றன. இதனால் எல்லா தேர்தலிலும் பாட்டாளி மக்கள் கட்சிக்கு கிடைத்து வந்த முக்கியத்துவம் 2026 தேர்தலில் அந்தக் கட்சி இரண்டாக பிரிந்து இருப்பதால் தேர்தல் களத்தில் அக்கட்சியின் பங்கு என்னவாகும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

உள்துறை அமைச்சர் வந்து போன பின்பு நாம் தமிழர் சீமான் விஜய் ன் தமிழக வெற்றி கழகம், ஆகியோரின் அரசியல் பயணங்கள் தி.மு.கவை எதிர்ப்பது ஒன்றே என்பது போன்ற தோற்றம் கட்டமைக்கப்பட்டது. கோவையில் பூத் கமிட்டி மாநாடு நடத்தி விஜய் தன்னுடைய செல்வாக்கை நிரூபித்து தி.மு.கவிற்கு சவாலாக அரசியலில் வேகப்படுத்தி இருக்கிறார். கோவையில் ரோடு ஷோ நடத்திய அவரது பிரம்மாண்டத்தை கண்டு அன்று மறுநாள் துணை முதல்வர் உதயநிதி நடத்திய ரோடு ஷோ வை ஒப்பிட்டு ஊடகங்கள் விவாதித்து தமிழக வெற்றி கழகத்திற்கு வருகின்ற கூட்டத்தை பார்த்து தி.மு.கவிற்கு கலக்கம் ஏற்பட்டிருக்கும் என்று பேசப்பட்டது.அமித் ஷா வருகைக்கு நான்கு நாளைக்கு முன்பு சென்னையில் தனியார் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாம் தமிழர்

கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கலந்துகொண்டு ஒரே மேடையில் அமர்ந்திருந்தனர்.

மேலும் விழாவில் பிரதமர் மோடி, அண்ணாமலைக்கு ஆதரவாக சீமான் பேசியதும் அதேபோல சீமானைப் புகழ்ந்து அண்ணாமலை பேசியுள்ளதும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

விழாவில் பேசிய சீமான், "உலகம் முழுக்கச் செல்லும் பிரதமர் மோடி ஒவ்வொரு முறையும், உலகின் முதல் மொழியான தமிழ் மொழி, எங்கள் இந்தியாவில் இருப்பது பெருமை எனக் கூறுகிறார். செல்லும் இடமெல்லாம் தமிழின் பெருமையை பிரதமர் மோடி உயர்த்திப் பிடிக்கிறார்.

அதேபோல தமிழகத்தில் பாஜக என்ற ஒரு கட்சி இருக்கிறது, அந்தக் கட்சி வளர்கிறது என்று தன்னுடைய செயல்களால் நிகழ்த்திக் காட்டியவர் என் அன்பு இளவல் அண்ணாமலை" என்று பேசியுள்ளார். அதேநேரத்தில் மும்மொழிக்கொள்கைக்கு எதிராக தாய்மொழியான தமிழ் மொழியின் அவசியம் குறித்தும் சீமான் பேசியுள்ளார்.

அதேபோல, போர்க்களத்தில் நிற்கும் ஒரு தளபதியாகத்தான் அண்ணன் சீமானைப் பார்ப்பதாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

"அண்ணன் சீமானை போர்க்களத்தில் நிற்கக்கூடிய ஒரு தளபதியாகத்தான் பார்க்கிறேன். காரணம் அவருடைய கொள்கை. கொள்கைக்காக எதை இழந்தாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டோடு தைரியமாக போர்க்களத்தில் போராடக் கூடியவர். அதுவே அவரை அரசியலில் ஒரு தனிப்பெரும் தலைவராக உயர்த்தியிருக்கிறது.



எனக்கும் அவருக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை, நான் தேசியத்தில் தமிழைப் பார்க்கிறேன், அவர் தமிழில் தேசியத்தைப் பார்க்கிறார். இருந்தும் அவருக்கு ஆதரவாக நான் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். காரணம், அரசியலில் அவர்கொண்ட நேர்மையும் நெஞ்சுறுதியும்தான்.நாங்கள் இருவரும் பங்கேற்கும் முதல் நிகழ்ச்சியாக இது இருக்கிறது" என்று பேசியுள்ளார்.

சீமான், அண்ணாமலை இருவரும் ஒருவரையொருவர் மாறி மாறி புகழ்ந்து பேசியது அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியது.

அதன் பிறகு சீமான் பேச்சில் பா.ஜ.க. பற்றி எதிர் விமர்சனம் வைப்பதே இல்லை. ஒரு படி மேலே போய் பா. ஜ.க.என்ன தவறு செய்கிறதோ அதையே காங்கிரஸ் செய்கிறது என்று சொல்லி பா.ஜ.கவுக்கு ஆதரவாக இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி உள்ளார்.சீமான் விஜய் இவர்கள் இருவரையும் திமுகவுக்கு எதிரான பிரச்சாரத்தை வலுவாக கட்டமைக்க வைத்திருக்கிறது பா.ஜ.க. என்று அரசியல் நோக்கர்கள் கூறுவதில் தவறில்லை. இனி என்னென்ன மாற்றங்கள் தமிழகத்தில் நடைபெறுகிறதோ என்பதை பொறுத்து இருந்து பார்க்க வேண்டும்.


# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 11 ஜூன் 2025 டைம்ஸ்- 12

தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
திருமதி சுஜாதா மூர்த்தி

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
கலைமாமணி நடிகர் பூ.விலங்கு மோகன்

தலைமை செய்தி ஆசிரியர்
மணவூர்.கி.விடாரண்யம்

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. ஆ.தமிழ்மாறன் எம்.ஏ.எம்.பில்
எஸ்.ரங்கராஜூ
ஆர்.சையது சித்திக்

நிர்வாக ஆசிரியர்
ஆர்.குணசேகரன்

செய்தியாளர்கள்
பி.வினோத், வெ.சுரேஷ்

செய்தி இணை ஆசிரியர்கள்
துடுப்பதி ரகுநாதன்
கவிஞர் பண்ருட்டி சுகந்தீனா
கோவை.பி.முத்துராஜ்
சென்னை எம்.ஜி.ரவீந்திரன்

இணையதள செய்தியாளர்
ஆர்.கோபிநாத்

சட்ட ஆலோசகர்
வி.என்.பிரசாத் எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
சி.இளவரசி - 044 23743007 /08

**அலுவலகம்:**
001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.
தொடர்பு: 044-2374 4661, 23743 007/8
6374285644
mitratimes2015@gmail.com
www.mitratimes.com

# பா.ம.க. கடந்து வந்த பாதை...

டாக்டர் ராமதாஸ் தான் சார்ந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் கல்வி, வேலைவாய்ப்பில் மிகவும் பின்தங்கியிருப்பதைக் கண்டவர், அந்தச் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களை ஒருங்கிணைத்து, 1980ம் ஆண்டு வன்னியர் சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார்".

மருத்துவராக தனது வாழ்க்கையை ஆரம்பித்து பா.ம.க என்கிற அரசியல் கட்சியைத் தொடங்கி தமிழக அரசியல் களத்தில் பல்வேறு ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தவர் மருத்துவர் ராமதாஸ். பல்வேறு விமர்சனங்கள் அவர்மீது முன்வைத்தாலும் தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத தலைவர் அவர். அவரால் தொடங்கப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சி கடந்து வந்த பாதையைப் பார்ப்போம்.

எம்ஜிஆர் ஆட்சியில் டாக்டர் ராமதாஸ் தலைமையில் வன்னிய சமுதாய மக்களால் செப்டம்பர் மாதம், 1987 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு மாபெரும் போராட்டம் ஆகும்.வன்னியர் சாதியினருக்கு பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு கோரி வன்னியர் சாதி சங்கத்தினரால் நடத்தப்பட்ட போராட்டமாகும். தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கு 20 விழுக்காடும், மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 2 விழுக்காடும் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி தொடர் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்த இட ஒதுக்கீடு போராட்டகாரர்களை அடக்குவதற்கு தமிழக காவல் துறையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 21 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். டாக்டர் ராமதாஸைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது அதிமுக அரசு. பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த சூழலில் எம்ஜிஆர் மரணம் அடைந்ததால் அந்த கோரிக்கை அப்படியே நின்று போனது.

1989ல் திமுக ஆட்சியைப் பிடித்ததும், மீண்டும் போராட்டத்தை அறிவித்தார் ராமதாஸ். பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் காலம் தாழ்த்தாமல் டாக்டர் ராமதாஸை அழைத்துப் பேச்சுநடத்தினார். வன்னியர் உட்பட 107 சமூகங்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வரையறைக்குள் கொண்டுவந்து, அதற் கென 20% ஒதுக்கீடு வழங்கினார். வன்னியர் சமூகத்துக்கு மட்டுமே 20% இடஒதுக்கீடு வேண்டும் என்று மீண்டும் போராட்டத்தை அறிவித்தார் டாக்டர் ராமதாஸ். அதன் பின்பு 16.07.1989 பாட்டாளி மக்கள் கட்சி என்ற அரசியலை இயக்கத்தை தொடங்கினார் டாக்டர் ராமதாஸ்.

தலித் சமூகத்தினருடனான நல்லுறவை மனதில் கொண்டு சில முக்கியமான நடவடிக்கைகளை எடுத்தார். அதில் மிக முக்கியமானது தமிழகத்தில் 100 இடங்களில் அம்பேத்கர் சிலைகளை நிறுவும் திட்டம். தமிழ்நாட்டில் அம்பேத்கர் சிலைகளை அதிகம் திறந்த தலித் அல்லாத தலைவர் டாக்டர் ராமதாஸ்தான். 1991 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி படுகொலைக்கு பிறகு இலங்கைத் தமிழர்களைப் பற்றி பேசவே அச்சப்பட்ட சூழலில் தைரியமாக பேசியவர் டாக்டர் ராமதாஸ். அதேபோல் தமிழுக்கு அவர் முன்னுரிமை தந்தார் அதற்காக பல முன்னெடுப்புகளை அவர் எடுத்தார்.



தமிழ் ஓசை' நாளிதழ், 'மக்கள் தொலைக்காட்சி' இரண்டும் கையாண்ட தனித்தமிழ் அவருடைய அக்கறைக்கான அத்தாட்சி. மருத்துவம், பொறியியல் படிப்புக்கான நுழைவுத்தேர்வை ரத்துசெய்ய வைத்தது, சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கொண்டுவரச் செய்தது, மதுக் கடைகள் திறந்திருக்கும் நேரத்தைக் குறைக்க வைத்தது, நெடுஞ் சாலையோரக் கடைகளை மூடவைத்தது, தமிழ் திரைப்படங்களுக்குத் தமிழில் பெயர் வைத்தால் வரிச்சலுகை என்று அறிவிக்கச் செய்தது என்று பல விஷயங்களைத் தன்னுடைய அரசியல் போராட்டங்களால் சாதித்தவர் ராமதாஸ்.

மத்திய மாநில அரசுகள் செய்யும் தவறுகள் எதுவாயினும் முதலில் தட்டிக்கேட்பவராக இருக்கிறார். கூடவே, அரசுக்கு ஆக்கபூர்வமான யோசனைகளை முன்வைக்கும் விரிவான அறிக்கையும் அவரிடம் இருந்தே முதலில் வருகிறது. தமிழக அரசுக்கு வழிகாட்டும் வகையில் இவர் வெளியிடும், நிழல் நிதிநிலை அறிக்கை, விவசாயத்துக்கென தனியே வெளியிடும் வேளாண் நிதிநிலை அறிக்கைகள் கவனத்துக்குரியன. மும்முறை மத்திய அரசில் அங்கம்வகித்தபோது ரயில்வே, சுகாதாரம் உள்ளிட்ட துறைகள் வழி தமிழ்நாட்டுக்கு முக்கியமான சில திட்டங்களையும் கொண்டுவந்தது.

பாமகவின் தேர்தல் பயணம் என்று பார்த்தால். கட்சி தொடங்கிய ஆறு மாதத்துக்குள், அப்போதைய வேலூர் மாவட்டத்தில் உள்ள பேரணமல்லூர் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டது பாட்டாளி மக்கள் கட்சி. அந்தத் தேர்தலில், வெற்றி பெறாவிட்டாலும் 22,000 வாக்குகளைப் பெற்றது. 1989 நாடாளுமன்றத் தேர்தலில், எந்தக் கட்சியுடனும் கூட்டணி இல்லாமல் 33 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டு, ஆறு சதவிகித வாக்குகளைப் பெற்று அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. அதன்பிறகு 1991 தேர்தலிலும் இஸ்லாமிய, தமிழ்த் தேசிய, அம்பேத்கரிய அமைப்புகளை இணைத்து ஒரு புதிய கூட்டணியை

உருவாக்கினார் மருத்துவர் ராமதாஸ்.

199 தொகுதிகளில் போட்டியிட்டது பா.ம.க. ஆனால், அந்தத் தேர்தலில், பா.ம.கவின் சார்பாகப் போட்டியிட்ட பண்ருட்டி ராமச்சந்தின் மட்டுமே வெற்றுபெற்றார். ஆனால், அந்தத் தேர்தலிலும் ஆறு சதவ்கித வாக்குகளைப் பெற்று அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது . அடுத்த வந்த 1996 சட்டமன்றத் தேர்தலில், தி.மு.கவுடன் கூட்டணிக்குச் செல்ல முடிவெடுத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால், தொகுதிப் பங்கீட்டில் சிக்கல் எழ, பின் வாழப்பாடி ராமமூர்த்தியின் திவாரி காங்கிரஸ் மற்றும் 12 சிறிய கட்சிகளுடன் இணைந்து, 116 தொகுதியில் போட்டியிட்டு நான்கு தொகுதியில் வெற்றி பெற்றது பா.ம.க. மீண்டும் ஆறு சதவிகித வாக்குகளைப் பெற்றது. தமிழகத்தில் ஒரு கட்சி தொடங்கப்பட்டு மூன்று தேர்தலில், பிரதான இருபெரும் திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி இல்லாமல் ஆறு சதவிகித வாக்குகளைப் பெற்றது பா.ம.கவின் மீது அனைவரின் கவனத்தையும் திருப்பியது. பின்னர், 98ல் அதிமுகவுடன் கூட்டணி. 5 தொகுதியில் போட்டியிட்டு 4 ல் வெற்றி பெற்றது. தங்கள் கட்சிக்குக் கிடைத்த முதல் மந்திரி பதவியை பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த தலித் எழில்மலைக்குக் கொடுத்தார் மருத்துவர் ராமதாஸ். பிறகு, 1999 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க, பா.ஜ.க கூட்டணியில் இருந்து விலகிக்கொள்ள, தி,மு,க வுடன் கூட்டணி சேரும் வாய்ப்பு உருவானது. அப்போது, ஏழு தொகுதியில் போட்டியிட்டு, ஐந்து தொகுதிகளில் வெற்றிபெற்று, வாஜ்பாய் தலைமையிலான மத்திய மந்திரி சபையிலும் இடம் பெற்றது பா.ம.க.

பிறகு 2001 சட்டமன்றத் தேர்தலில், அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து 20 இடங்களில் வெற்றி, 2004 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான கூட்டணியில் போட்டியிட்ட அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி என ஏறுமுகத்தையும், 2009 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட அனைத்து இடங்களிலும் தோல்வி. பிறகு 2014 நாடாளுமன்றத் தேர்தலில் தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்ந்து, போட்டியிட்டு ஒரு இடத்தில் மட்டும் (அன்புமணி) வெற்றி என இறங்கு முகத்தையும் சந்தித்தது பா.ம.க.



பிறகு, 2016 சட்டமன்றத் தேர்தலில், இரண்டு திராவிடக் கட்சிகளுடனும் கூட்டணி இல்லை என அறிவித்து தனித்துக் களம் இறங்கியது பா.ம.க. அந்தக் கட்சியின் இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். ஆனால், அந்தத் தேர்தலில் ஒரு இடத்தில்கூட பா.ம.கவுக்கு வெற்றி கிடைக்கவில்லை. 2014 நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்து போட்டியிட்டது பா.ம.க. தர்மபுரியில் போட்டியிட்ட மருத்துவர் அன்புமணி மட்டும் வெற்றிபெற்றார். பிறகு, 2016 தேர்தலில், திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி வைக்காமல், தனித்துப் போட்டியிடுவோம் என அறிவித்து அதேபோல போட்டியிட்டபோது பா.ம.க. அப்போது ஒரு இடத்தில் கூட வெற்றிபெற முடியவில்லை என்றாலும், 5.36 சதவிகித சதவிகித வாக்கையும் பா.ம.கவின் மீது மக்கள் மத்தியில் சிறிதளவு நம்பிக்கையும் ஏற்பட்டது.

ஆனால், மீண்டும், 2019 நாடாளுமன்றத் தேர்தலில், அ.தி.மு.க, பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்தது பா.ம.கவின் மீது மிகப்பெரிய விமர்சனத்தை உண்டாக்கியது...அந்தத் தேர்தலில் ஒரு இடத்தில்கூட வெற்றிபெறவும் முடியவில்லை... தொடர்ந்து, 2021 தேர்தலில், அதே கூட்டணியில், 23 இடங்களில் போட்டியிட்டு, 5 இடங்களில் வெற்றிபெற்றது... தொடர்ந்து, 2024 நாடாளுமன்றத் தேர்தலில், அதிமுக அல்லாத தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பத்து இடங்களில் போட்டியிட்டு ஒரு இடத்தில்கூட வெற்றிபெற முடியவில்லை. 4.4 வாக்கு சதவிகிதத்தைப் பெற்று மாநிலக் கட்சி அந்தஸ்தையும் இழந்தது..,தொடர்ந்து நடைபெற்ற விக்கிரவாண்டி இடைத்தேர்தலில், அதிமுக போட்டியிடவில்லை என ஒதுங்கிக்கொண்ட நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பாக, பாமக தேர்தலை எதிர்கொண்டது.., பாமக சார்பில் போட்டியிட்ட அன்புமணி 56,296 வாக்குகளைப் பெற்றார்..,திமுக வேட்பாளரிடம், 67,757 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் கட்சி ஆரம்பித்து, 89,91,96 என முதல் மூன்று பொதுத் தேர்தலில், ஆறு சதவிகித வாக்குகளையும் கணிசமான வெற்றியையும் பதிவு செய்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்த பாமக, அடுத்து வந்த,1998,1999,2001,2006 நான்கு தேர்தலில் நல்ல வெற்றியைப் பதிவு செய்து உச்சத்துக்குச் சென்றது... அடுத்து வந்த தேர்தல்களில் தொடர்ந்து பின்னடைவுகளைச் சந்தித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சூழலில் டாக்டர் ராமதாஸ் அவர்களுக்கும் அவரது மகன் அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும் இடையே ஏற்படுகின்ற மோதல் பாட்டாளி மக்கள் கட்சி தொண்டர்களிடையே குறிப்பாக வன்னியர் சமூகத்து மக்களிடையே மிகுந்த குழப்பத்தையும் வேதனையும் தந்துவிட்டது. நான் சொல்வதைக் கேட்டு கூட்டணி அமைத்தால் வெற்றி பெறலாம் . தனித்து நின்று நான்கு எம்எல்ஏ பெற்றவர்கள் நாம் இன்று கூட்டணியின் 5 எம்எல்ஏ பெற்று இருக்கிறோம். கூட்டணி எப்படி அமைக்க வேண்டும்என்று எனக்கு தெரியும் என்று மாமல்லபுரம் மாநாட்டில் ராமதாஸ் பேசியது குறிப்பிடத்தக்கது.

# 65 வருட சினிமா பயணத்தைத் தொடர்ந்து, எம்.பி .ஆனார் கமலஹாசன்!




பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படும் எம்.பி. மக்களவை உறுப்பினர் என்றும், எம்.எல்.ஏக்களால் தேர்ந்தெடுக்கப்படும் எம்.பி. மாநிலங்களவை உறுப்பினர் என்றும் குறிப்பிடப்படுவார்கள். பல்வேறு துறைகளில் இருந்து இந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள் . தி.மு.கவின் ஆதரவோடு கமலஹாசன் மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கமல்ஹாசன் சிறந்த குழந்தை நட்சத்திரம் மற்றும் சிறந்த நடிகர் என்ற முறையில் 4 தேசிய விருதுகளும், சிறந்த படம் என்ற முறையில் தயாரிப்பாளராக 1 தேசிய விருதும், 10 தமிழக அரசு திரைப்பட விருதுகள்கள், 4 ஆந்திர அரசின் நந்தி விருதுகள், 19 பிலிம்பேர் விருதுகள் உள்ளடங்கலாக பல இந்திய விருதுகளை வென்றுள்ளார், இவர் சிறந்த பிறமொழிப்படத்திற்கான, அகாடமி விருதிற்கு இந்தியாவிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட திரைப்படங்களில் அதிகமானவற்றிலும் நடித்திருந்தார்.

நடிகராக மட்டுமல்லாது திரைக்கதையாசிரியர், இயக்குநர், பாடலாசிரியர், பின்னணிப் பாடகர், நடன அமைப்பாளர் எனப் பன்முகத்தன்மை கொண்டவராக விளங்குகின்றார். இந்திய திரைத்துறைக்கு ஆற்றிய பணிக்காக பத்ம பூஷண், பத்மஸ்ரீ விருதும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.அத்துடன் சத்தியபாமா பல்கலைக்கழகம் கமல்ஹாசனிற்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

2019 இல் 60 ஆண்டுகளை திரைத்துறையில் நிறைவுசெய்த இந்திய நடிகர்கள் மிகச்சிலரில் ஒருவரானார்.

இவரின் திரைத்துறை வாழ்க்கையானது 1960 ஆம் ஆண்டில் தமிழில் வெளிவந்த "களத்தூர் கண்ணம்மா "எனும் திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக ஆரம்பித்தது. இந்தத் திரைப்படத்தில் நடித்தற்காக ஜனாதிபதி விருது பெற்றார். குழந்தை நட்சத்திரமாக 6 திரைப்படங்களில் நடித்துள்ளார். துணை நடண ஆசிரியராக தங்கப்பன் அவர்களிடம் சில திரைப்படங்களில் பணியாற்றியுள்ளார். 1973 ஆம் ஆண்டில் கைலாசம் பாலசந்தரின் இயக்கத்தில் வெளிவந்த அரங்கேற்றம் திரைப்படம் இவர் நடித்த முதல் வாலிப வயது திரைப்படம். கன்னியாகுமரி எனும் மலையாள படமே முதன் முதலாக கதாநாயகனாக நடித்து வெளியானதிரைப்படமாகும், இத்திரைப்படதிற்காக முதல் பிலிம்பேர் விருது பெற்றார். தனது 25வது படமான அபூர்வ ராகங்கள் எனும் திரைப்படத்தில் முக்கியக் கதாபாத்திரத்தில் நடித்து தமிழுக்கான முதல் பிலிம்பேர் விருது வென்றார்.

1983 ஆம் ஆண்டில் இயக்குநர் பாலு மகேந்திரா இயக்கிய மூன்றாம் பிறை திரைப்படத்தில் நடித்தார். இந்தப் படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகருக்கான இந்திய தேசிய விருது கிடைத்தது. 1987 இல் மணிரத்னம் இயக்கத்தில் நாயகன் திரைப்படத்திலும், 1996 இல் ஷங்கர் இயக்கத்தில் இந்தியன் 1996 திரைப்படத்திலும் நடித்தார். இந்தத் திரைப்படத்திற்காக இவருக்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது இந்திய தேசிய விருது கிடைத்தது. இந்த இரு படங்களிலும் இவரின் நடிப்பு பெரும் பாராட்டைப் பெற்றுத் தந்தது. 1992 ஆண்டு சிறந்த மாநில மொழி திரைப்படத்திற்கான தேசிய விருதை தேவர் மகன் படம் பெற்றது, தயாரிப்பாளர் என்ற முறையில் கமல்ஹாசன் தேசிய விருது பெற்றார். இதுவரை 220 க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். இதில் தசாவதாரம் திரைப்படத்தில் பத்து வேடங்களில் நடித்திருந்தார்.

1979 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது வழங்கியது. 1990 இல் இந்திய அரசு பத்மஸ்ரீ விருதும், 2014 இல் பத்ம பூஷண் விருதும் வழங்கியது. 2016 இல் செவாலியே விருது பெற்றார்.

கமல்ஹாசன், தமிழ் தவிர இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், வங்காளம் ஆகிய மொழித் திரைப்படங்களிலும் நடித்துள்ளார். ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேசனல் என்ற திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தையும் நடத்தி வருகின்றார். மக்கள் நீதி மையம் என்ற அரசியல் கட்சியை தொடங்கினார். கோவை தெற்கு தொகுதியில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் தோற்று போனார்.

பின்னர் திமுகவுக்கு 2024 பாராளுமன்ற தேர்தலில் ஆதரவளித்தார். அப்போது செய்யப்பட்ட உடன்படிக்கை அடிப்படையில் தற்போது கமலஹாசனுக்கு தி.மு.க சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# 'ரெய்டு'க்குபயந்து ரூபாய் நோட்டுகளை சாலையில் வீசிய அதிகாரி!

**ஒ**டிசா மாநிலம் புவனேஸ்வரில் ஊரக வளர்ச்சித் துறையில் முதன்மைப் பொறியாளராக (சாலைப் பணிகள்) பணிபுரிபவர் பைகுந்தநாத் சாரங்கி. இவர் சாலைப் பணிகள் தொடர்பாக ஒப்பந்ததாரர்களிடம் தொடர்ச்சியாக லஞ்சம் வாங்கி வருவதாக லஞ்ச ஒழிப்புத் துறையினருக்கு தகவல் கிடைத்தது.

இதன்பேரில், பொறியாளர் பைகுந்தநாத்துக்கு சொந்தமான வீடுகள், உறவினர் வீடுகள் எங்கெங்கு உள்ளன என்பதை லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் கடந்த சில வாரங்களாக ரகசியமாக கண்காணித்து வந்தனர். மேலும், அவர் அடிக்கடி செல்லும் இடங்களையும், அவரது செல்ஃபோன் பேச்சுகளையும் அதிகாரிகள் சோதித்து வந்தனர்.



இதில், அவர் பலரிடம் லஞ்சம் வாங்கி ஏராளமான வீடுகளையும், சொத்துகளையும் வாங்கியது தெரியவந்தது. இதன் பேரில், வருமானத்துக்கு அதிகமாக சொத்துகளை சேர்த்தாக அவர் மீது லஞ்ச ஒழிப்புத் துறையினர் சில தினங்களுக்கு முன்பு வழக்குப்பதிவு செய்தனர்.

இந்நிலையில், பைகுந்தநாத்துக்கு சொந்தமான அனைத்து இடங்களுக்கும் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் நேற்று அதிரடியாக சென்றனர். புவனேஸ்வரில் பைகுந்தநாத் தங்கியுள்ள அடுக்குமாடி குடியிருப்பு, அன்குல் மாவட்டத்தில் உள்ள அவரது இரண்டு மாடி வீடு, அதே பகுதியில் உள்ள அவரது பெற்றோர் மற்றும் உறவினர்களின் வீடுகள், பைகுந்தநாத்தின் அலுவலக அறை ஆகிய இடங்களுக்கு லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சென்றனர்.



அந்த வகையில், புவனேஸ்வரில் பைகுந்தநாத் தங்கியுள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கு லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் ஜீப்பில் சென்றனர். ஜீப் சத்தத்தை கேட்டு வெளியே பார்த்தபோது, அங்கு லஞ்ச ஒழிப்புத்துறையினர் வருவதை கண்டதும் பைகுந்தநாத் அதிர்ச்சியில் உறைந்தார். பின்னர், உடனடியாக தனது வீட்டில் பதுக்கி வைத்திருந்த 500 ரூபாய் கட்டுகள் அடங்கிய கோடிக்கணக்கான லஞ்சப் பணத்தை அப்படியே கொண்டு வந்து பின்புற ஜன்னல் வழியாக வெளியே வீசி எறிந்தார்.

இதனால் அந்த அடுக்குமாடி குடியிருப்பில் பண மழை பெய்வதை போல ரூபாய் நோட்டுகள் காற்றில் பறந்து விழுந்து கொண்டிருந்தன. ஆனால், முன்னெச்சரிக்கையாக அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள், இதனை பார்த்து உடனடியாக மற்ற அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து, கீழே விழுந்து கிடந்த பணத்தை சுமார் ஒரு மணிநேரத்துக்கும் மேலாக அள்ளிய லஞ்ச ஒழிப்புத் துறையினர், அதனை வீட்டுக்குள் கொண்டு வந்தனர். பின்னர், வீட்டுக்குள் நடத்தப்பட்ட சோதனையிலும் கட்டுக்கட்டாக பணம் சிக்கியது. மற்ற இடங்களில் இருந்தும் பணம் பறிமுதல் செய்யப்பட்டன.

கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ. 2.1 கோடி என லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், அவரது வீட்டில் இருந்து தங்கம், வெள்ளி என விலை உயர்ந்த பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன. கைப்பற்றப்பட்ட இந்த பணம் மற்றும் பொருட்கள் குறித்து அரசு பொறியாளர் பைகுந்தநாத்திடம் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நகை அடகு வைக்க ரிசர்வ் வங்கி விதிமுறைகள்:

# நடுத்தர வர்க்கத்தை பாதிக்குமா?

**த**ங்க நகைகளை அடகு வைப்பதற்கு புதியதாக 9 விதிமுறைகளை ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களும் ஒரே மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

தங்க நகையின் மதிப்பில் 75% தொகை மட்டுமே கடன் வழங்கப்படும்.

அடமானம் வைக்கப்படும் நகைகளுக்கு உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

வங்கிகள்(அ) வங்கியல்லா நிதி நிறுவனங்கள் தங்கத்திற்கான தூய்மை சான்றிதழை வழங்க வேண்டும்.

தங்க ஆபரணங்கள் மற்றும் வங்கிகளில் வாங்கிய தங்க நாணயங்களுக்கு மட்டுமே கடன் பெற முடியும்.

வெள்ளிப் பொருட்களுக்கும் கடன் வழங்க ரிசர்வ் வங்கி அனுமதி.

ஒரு கிலோவுக்கு குறைவாக உள்ள நகைகளுக்கு மட்டுமே கடன் வழங்க அனுமதி.

அடகு வைக்கப்படும் நகைகள் 22 காரட் தங்கத்தின் விலையில் மட்டுமே மதிப்பிடப்படும்.

கடன் ஒப்பந்தத்தில் முழுமையான விவரங்கள் இருக்க வேண்டும்.

அடகு வைக்கப்பட்ட தங்கத்திற்கான முழு தொகையையும் வாடிக்கையாளர்கள் செலுத்திய 7 நாட்களுக்குள் நகைகளை திருப்பித் தரவேண்டும்.

தாமதம் ஆகும் ஒவ்வொரு நாளுக்கும் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குபவர்கள் 5 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும்.

அனைத்து கடன் வழங்குநர்களுக்கும் கடன் மதிப்பு விகிதம் 75% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள், ரூ.100 மதிப்புள்ள தங்க நகைகளை அடமானம் வைத்தால், அதிகபட்சம் ரூ.75 மட்டுமே கடனாகப் பெற முடியும். இதுவரையில் நகையின் மதிப்பீட்டில் கிட்டத்தட்ட 90% வரை கடன் வழங்கப்பட்டு வந்தது.

இந்த விதியை அமல்படுத்தும்போது, கடன் தொகை கணிசமாக குறையும். அதேநேரம் தங்கத்தின் விலை எப்போது ஏறும் அல்லது இறங்கும் என்று தெரியாத நிலையில் இதுபோன்ற ஒரு வரம்பு நிர்ணயிப்பது கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு சாதகமான ஒன்று.

சில நேரங்களில், கடன் தொகையும் வட்டியையும் கணக்கிட்டு பார்க்கும் போது அன்றைய சந்தை நிலவரப்படி திருப்பிச்செலுத்த வேண்டிய தொகை அதிகமாக இருக்கும் பட்சத்தில் சில கடனாளிகள் நகையை மீட்காமல் அப்படியேவிட்டுவிடக்கூடும்.பின்னர் நகைகள் ஏலத்தில் விடப்பட்டு, கடன் வழங்கிய நிறுவனங்கள் அந்த பணத்தை நிறுவனத்துக்கு மீண்டும் புழக்கத்தில் கொண்டு வருவது கால தாமதம், வட்டி இழப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும்.



புதிய விதிமுறைகளின்படி கடன் வாங்குபவர்கள் அடமானம் வைக்கப்படும் நகைக்கு, தான்

உரிமையாளர் என்ற ஆதாரத்தை வழங்க வேண்டும். நகையின் உரிமை சந்தேகத்துக்குரியதாக இருந்தால் கடன் வழங்கப்பட மாட்டாது.

அசல் ரசீதுகள் இல்லாதபட்சத்தில் கடன் பெறுபவர்கள் இந்த நகை தங்களுக்கு எப்படி உரிமையானது என்பதை விளக்கும் வகையில் ஒரு அறிக்கை தர வேண்டும். நமது நாட்டைப் பொறுத்தவரை தங்கநகைகள் என்பது குடும்பச் சொத்துகள். தலைமுறைகளை தாண்டி இன்றும் பயன்பாட்டில் உள்ளன. எனவே இந்த விதிமுறையை காரணம் காட்டி கடன் வழங்க வங்கிகள் மறுக்கக்கூடும்.




கடன் வழங்குபவர்கள், தாங்கள் பெறும் நகைகளின் தூய்மை, எடை மற்றும் மதிப்பு குறித்த சான்றிதழை வழங்க வேண்டும். அதில் தூய்மை (காரட் அடிப்படையில்), மொத்த எடை, நிகர எடை, கற்கள், ஏதேனும் சேதங்கள் இருந்தாலும் அதைப்பற்றி குறிப்பிடுவதோடு, அடமானம் வைக்கப்படும் நகையின் படத்தையும் சான்றிதழுடன் இணைக்க வேண்டும். இந்த சான்றிதழில் கடன் வழங்குபவரும், வாங்குபவரும் கையெழுத்திடுவதோடு இதன் நகல் கடனாளிக்கு வழங்கப்பட வேண்டும்.

தங்கத்தின் தூய்மைக்கான சான்றிதழ் வழங்கும் பணி மிகவும் சிக்கலானது. பரபரப்பான வங்கி சூழ்நிலையில் இதுபோன்ற ஆய்வுகள் காலதாமதத்தை ஏற்படுத்தும். கடனாளிகள் உடனே கடன் பெற இயலாது என்பதோடு, கடன் வழங்கும் நிறுவனங்களில் முழுநேர தகுதி வாய்ந்த நகை மதிப்பீட்டாளர் இருக்க வேண்டும். அத்துடன், கிட்டத்தட்ட ஒரு நகைக் கடைக்கு தேவையான அனைத்து வகை சாதனங்களும் தேவைப்படக்கூடும்.

அடமானம் செய்யப்பட்ட நகையை விடுவித்தல்: கடன் முழுவதும் திருப்பிச் செலுத்தப்பட்ட 7 வேலை நாட்களுக்குள் அடமானம் செய்யப்பட்ட நகைகளை கடனாளியிடம் திருப்பித் தர வேண்டும். தாமதமானால், கடன் வழங்குபவர்/ வழங்கும் வங்கி தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ.5,000 இழப்பீடு வழங்க வேண்டும். பொதுவாக கடனை திருப்பிச் செலுத்திய நாளிலேயே நகை திரும்ப வழங்கப்படும் நிலையில், இந்த விதி தேவையற்றதாகஉள்ளது.

இந்த புதிய விதிமுறைகள் கடன் வாங்குபவர்கள் கடன் விதிமுறைகளைப் புரிந்துகொள்வதை எளிதாக்கும் எனது துறை சார்ந்த வல்லுநர்கள் கூறுகிறார்கள். இந்த வரைவில் கூறப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டால் எல்லோராலும் எளிதாக கடன் பெற முடியாது. தனியார் அடகுகடைக்காரர்கள் இந்த நிலையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, வங்கிகளின் கடன் விகிதத்தை காட்டிலும் கூடுதலாக கடன் தருவதோடு கூடுதல் வட்டி வசூலிப்பதற்கும் வாய்ப்பு உள்ளது.

வரைவு விதிமுறைகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. பொதுமக்கள், துறை சார்ந்த நிபுணர்கள் வழங்கும் கருத்துகளின் அடிப்படையில் மாற்றங்கள் இருக்கலாம்.இந்த புதிய விதிமுறைகளால் நடுத்தர குடும்பங்கள் பாதிக்கப்படும் என்ற கருத்தை மத்திய அரசின் நிதி அமைச்சகம் புரிந்து கொண்டு அதற்கேற்றார் போல் நடவடிக்கை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வாகனமும் வாழ்க்கையும் ஒன்று!

*கார் ஓட்டிக்கொண்டு போகிறீர்கள். தேசிய நெடுஞ்சாலையில் நிதானமாக மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் போய்க் கொண்டிருக்கும் போது பின்னால் ஹாரன் சத்தம் கேட்கிறது!*

*ரியர் வியு கண்ணாடி வழியாகப் பார்க்கிறீர்கள். ஒரு விலையுயர்ந்த காரில்...*

*இளைஞர் ஒருவர் உங்களை முந்த முயற்சிப்பது தெரிகிறது! அது உங்களுக்குப் பிடிக்கவில்லை!*

*வேகத்தை 70ல் இருந்து 80க்கு உயர்த்துகிறீர்கள்.*

*அவரும் உயர்த்தியிருப்பார் போல...!*

*இப்போது இரண்டு வண்டிகளும் ஒன்றுக்கொன்று இணையாக ...!*

*சளைத்தவரா நீங்கள்...?*

*வேகத்தை 100க்கு ஏற்றுகிறீர்கள்.*

*அவரும் நமட்டுச் சிரிப்புடன் 110க்கு ஏற்றி முன்னேற முயற்சிக்கிறார்.*

*நீங்கள் ஐந்தாவது கியருக்கு வேகமாக மாறி... 120ஐத் தொடுகிறீர்கள்.*

*இப்படியே போனால்.....*

*முடிவு என்னவாக இருக்கும் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை!*

*இந்நிலையில்....*

*உங்களுக்கு ஒரு இமாலயக் கேள்வி?!!*

*இப்போது.....*

*உங்கள் காரை ஓட்டிக் கொண்டிருப்பது நீங்களா... அல்லது அந்த இளைஞரா...?!*

*நிதானமாக 70 கி.மீ. வேகத்தில் இயற்கையை ரசித்தபடி... பாதுகாப்பாகக் கார் ஓட்டிக் கொண்டிருந்த நீங்கள்...*

*இப்போதோ...*

*ஆபத்தான முறையில் 120 கி.மீ. வேகத்தில்...*

*கடும் கோபத்துடன் ஓட்டிக் கொண்டிருக்கிறீர்கள்!*

*காரணம்.... வேறு யாரோ.. எவரோ..?*

*வாழ்க்கையையும் சிலர் இப்படித்தான் கடத்துகிறார்கள். தனக்கு எது தேவை... எது வேண்டும்... தனக்கு எது முக்கியம் என்பதைப் பற்றிய உணர்வின்றி...*

*அடுத்தவர்களைப் பார்த்துப் பொறாமையில் ஏதேதோ செய்து...*

*தங்கள் இலக்கைக் கோட்டை விடுவதோடு...*

*பேராபத்தையும் தங்களுக்கு வருவித்துக் கொள்கிறார்கள்!*

*உங்கள் வாழ்க்கை எனும் வாகனத்தை பிறர் ஓட்டுமாறு செய்து விட வேண்டாம்!*

*நாமே ஓட்ட வேண்டும்!*

*வாழ்க்கை என்பது ஒரு நீண்ட பயணம்!*

*அதில் நமது கட்டுப்பாட்டில் நமது வாகனத்தை...*


*நிதானமாக நாமே இயக்கிச் செல்லும்போது...*

*நம் வாழ்க்கைப் பயணத்தின் இலக்கை... எல்லையை...*

*எளிதாக... பாதுகாப்பாக.... சென்றடைய நிச்சயம் நம்மால் முடியும்!*

*- ப. முத்துராஜ்*
















# வயதான பெற்றோர்களை பராமரிக்க வேண்டுமா!

வயதான தாய் தந்தையை பராமரிக்க வேண்டிய மகனோ மகளோ தவிர்க்க இயலாத காரணங்களால் ஒரு பாதுகாப்பான இடத்தில் அவர்களை வைக்க வேண்டும் என்று எண்ணம் இருக்கிறது. சொந்த வீடு வேலைக்காரர்கள் என்றெல்லாம் பார்த்து பார்த்து வைத்துக் கொடுத்தாலும் அதிலே பாதுகாப்பும் இல்லை. மன நிறைவும் இல்லை. கூடவே வைத்துக் கொள்ள முடியாத சூழலில் பலர் வெளி மாவட்டங்களில் வெளிநாடுகளில் வசித்து வருகிறார்கள். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு பண்ண தயாராக இருக்கிறேன் .எங்கள் பெற்றோரை பார்த்துக் கொண்டால் போதும் என்று பேசுகிற, கேட்கிற பலரை கேள்விப்பட்டிருக்கிறோம்.

குறிப்பாக உயர் பதவியிலும் அரசு வேலைகளிலும் ஓய்வு பெற்று பென்ஷன் வாங்கிக் கொண்டிருப்பவர்கள் தங்கள் மனைவியோடு தனிமையில் வாழும்போது அவர்களுக்கான அடிப்படை வசதிகளை என்னதான் பணம் கொடுத்தாலும் நம் உறவுகள் செய்வதைப் போல வருமா என்று எண்ணம் நமக்கு வருவது உண்டு .

அப்படி நினைக்கும் உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான இல்லம் இருக்கிறது. மகாபலிபுரத்திலிருந்து கிழக்கு கடற்கரை சாலையில் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் காலைக்கு சற்று உள்ளடங்கியவாறு இருக்கிறது. இதன் நிறுவனருக்கு இது இரண்டாவது நிறுவனம் ஆகும். முதல் நிறுவனம் கிழக்கு கடற்கரை சாலையில் மரக்காணத்தில் சென்னை ஹோம் என்ற பெயரில் இருக்கிறது. அதுவும் மிகவும் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

இங்கே வில்லாக்கள், சிங்கிள் பெட்ரூம், டபுள் பெட்ரூம் என தனித்தனி வீடுகள் இருக்கின்றன. எல்லா வீடுகளிலும் நுழைந்தவுடன் வாராண்டா,ஹால்,டாய்லெட் வசதியுடன் கூடிய ஒரு பெட்ரூம், பேன்ட்ரி எனப்படும் ஒரு சிறிய சமையல் மேடை, ஆகியவை இருக்கின்றன.

பிரிட்ஜ், டிவி, ஏர் கண்டிஷனர், கியாஸ் கனெக்சன் ஆகிய வசதிகள் ஒவ்வொரு வீட்டுக்கும் உண்டு. சைவ உணவுக்காரர்களுக்கு என்று ஒரு சமையல் கூடமும் அசைவ உணவுக்காரர்களுக்கு என்று ஒரு சமையல் கூடமும் தனித்தனியாக டைனிங் ஹால்களும் உண்டு. நீச்சல் குளம், நடைப்பயிற்சிக்கான பாதை, உடற்பயிற்சி கூடம், இரண்டு செவிலியர் உட்பட்ட ஒரு கிளினிக், நூலகம், .அருகே நகரத்துக்கு சென்று வர வாகன வசதிகள், கம்யூனிட்டி ஹால் ,ஒரு பிள்ளையார் கோயில்ஆகியவையும் உள்ளன.வயதானவர்களுக்கு தேவையான மசாஜ் வசதிகளும், பிசியோதெரப்பிஸ்ட்டுகளும் இருக்கிறார்கள்.

24 ஹவர்ஸ் ஜெனரேட்டர் பேக்கப், ஸூவேஜ் ட்ரீட்மென்ட் பிளான்ட், ஹால் , பெட்ரூம், டாய்லெட் ஆகிய இடங்களில் எமர்ஜென்சி பஸ்ஸர், இன்டர்காம் வசதி கிளப் ஹவுசிலும் லைப்ரரியிலும் வைஃபை, சி சி டிவி கேமரா. திறந்தவெளி கார் நிறுத்துமிடம், நெருங்கிய உறவினர்கள் வந்தால் ஓரிரு நாள் தங்குவதற்கு தனி விருந்தினர் விடுதி, மருந்து மாத்திரைகள், மளிகை பொருட்கள் டோர் டெலிவரி, அருகில் உள்ள மருத்துவமனைகளுடன் டைஅப், ஆகியனவாகும்.

நாம் வீட்டை சொந்தமாக வாங்கிக் கொள்ளலாம். அல்லது வாடகைக்கும் இருக்கலாம். அலுவலகம்: # 3/242, இராஜேந்திரா கார்டன், வெட்டுவாங்கேணி, சென்னை 600115. 9962106222/9841077770

**தகவல்: எம்.எஸ்.ராஜகோபால்**



# இரக்கம் காட்டியதன் விளைவு!

சிங்கப்பூர் நாட்டின் தோ பாயோ பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் இந்திய வம்சாவளியை சேர்ந்த சண்முகானந்தம் ஷியாமலா (வயது 70) என்ற பெண் வசித்து வருகிறார்.

இவர் கடந்த 2020ம் ஆண்டு தனது வீட்டிற்கு அருகே புறாக்களுக்கு உணவு அளித்துள்ளார். சிங்கப்பூரில் பொதுவெளியில் பறவைகள், விலங்களுகளுக்கு உணவு அளிக்க வேண்டுமென்றால் வனவிலங்குகள் மேலாண்மை அதிகாரியிடமிருந்து அனுமதி சான்றிதழ் பெற வேண்டும். ஆனால், ஷியாமலா எந்த வித அனுமதியுமின்றி வீட்டில் புறாக்களுக்கு உணவு அளித்துள்ளார். இது தொடர்பாக புகார் அளிக்கப்பட்ட நிலையில் ஷியாமலாவை 2020ம் ஆண்டே கோர்ட்டு எச்சரித்து அனுப்பியது. ஆனால், ஷியாமலா தொடர்ந்து புறாக்களுக்கு உணவு அளித்து வந்துள்ளார்.

இந்நிலையில், இது தொடர்பாக ஷியாமலா மீது மீண்டும் புகார் அளிக்கப்பட்டது. புகாரை விசாரித்த சிங்கப்பூர் கோர்ட்டு, சட்டவிரோதமாக புறாக்களுக்கு உணவு அளித்ததாக ஷியாமலாவுக்கு 1,200 சிங்கப்பூர் டாலர்கள் (இந்திய மதிப்பில் சுமார் 80 ஆயிரம் ரூபாய்) அபராதம் விதித்துள்ளது.



# குழந்தைகளின் அறிவுத்திறனை அதிகரிக்கச் செய்வது எப்படி?

குழந்தைகளின் முதல் ஐந்து வயது வரை சத்தான உணவைக் கொடுப்பது ரொம்பவே முக்கியம்.

பாடப் புத்தகங்களை தவிர, நிறைய விஷயங்களை அவர்கள் கற்றுக்கொள்ள ஊக்கப்படுத்த வேண்டும். பாட்டு கேட்க, இயற்கையை ரசிக்க, அவங்களுக்குத் தெரியாத விஷயங்களை கேள்வி கேட்டு தெரிந்து கொள்ள உற்சாகப்படுத்த வேண்டும்.

முக்கியமா நாம் பொறுமையாக அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டும். நமக்கே தெரியாத விஷயமாக இருந்தாலும்கூட அதை நாம் முதலில் தெரிந்துகொண்டு பிறகு கு ழந்தைக்குத் தெரியப்படுத்தலாம்.

மிதமாக குழந்தைகளை அரவணைத்துப் போக வேண்டும். அதற்கு நாம்தான் முதலில் பக்குவப்பட வேண்டும். குழந்தைங்க அதிகமான புத்திசாலித்தனமாக இருந்தார்கள் என்றால் அவங்களோட விருப்பத்துக்கும் ஈடுபாட்டுக்கும் ஏற்ற மாதிரி பயிற்சி தரவேண்டும்.

குழந்தைகளின் அறிவாற்றலை மேம்படுத்த விளையாட்டு போக்கிலேயே சில பயிற்சிகளைப் பழக்கப்படுத்த வேண்டும். அதற்கான சில முறைகள் இங்கே:

குழந்தைகள் அனைத்திலும் சிறந்து விளங்க வேண்டுமானால், வளரும் பருவத்தில், அவர்களின் அறிவாற்றலை மேம்படுத்த வேண்டும். இதற்கு, குழந்தைகளிடம் விளையாட்டு போக்கிலேயே சில பயிற்சிகளைப் பழக்கப்படுத்த வேண்டும். அதற்கான சில முறைகள் இங்கே: கேள்வி கேட்பதற்கு ஊக்குவித்தல்: குழந்தைகளின் அறிவுத்திறனை மேம்படுத்துவதில் முக்கியமான ஒன்று, அவர்களின் கேள்வி கேட்கும் திறனை ஊக்குவிப்பது. கேள்வி கேட்கும் முன், அது சார்ந்த விஷயத்தில் தெளிவு இருக்க வேண்டும் என சொல்லிக் கொடுங்கள். பாடமாக இருந்தால், அந்த பாடத்தை முதலில் ஆழ்ந்து படித்து, அதில் எழும் சந்தேகங்களைக் கேள்வியாகக் கேட்க வேண்டும். இந்தப் பயிற்சியால், சிக்கலான விஷயங்களில் சிந்திப்பது, அதற்கு தீர்வுக்காண முடிவுகள் எடுப்பது குறித்த திறன் இளம் வயதிலேயே மேம்படும்.

உங்கள் குழந்தையின் கற்றல், அறிவு திறன் மற்றும் வளர்ச்சியை அதிகரிப்பதில் நினைவாற்றல் முக்கிய பங்கு வகிக்கிறது. மோசமான நினைவாற்றல் திறன் கொண்ட ஒரு குழந்தை பள்ளியில் பல்வேறு இடர்பாடுகளை சந்திக்க நேரிடும். எனவே குழந்தையின் நினைவாற்றலை மேம்படுத்த சில வழிகள் உள்ளது. உங்கள் பிள்ளைக்கு எந்த பிரச்சனையும் இல்லாவிட்டாலும், இந்த உதவிக்குறிப்புகளை முயற்சிப்பது அவர்களின் நினைவாற்றலையும் மூளையின் திறனையும் மேலும் கூர்மைப்படுத்த உதவும்.

# மனிதனின் அடிப்படை உரிமைகளை தெரிந்து கொள்வோமா?



மனித உரிமை என்பது, ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கப் பெறவேண்டிய மற்றும் உரித்தான அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் ஆகும். மனிதன் என்றாலே அவன் இவைகளால் வாழ முடியாது என கருதப்படும் அடிப்படையான தேவைகளை உள்ளடக்கிய உரிமைகள் இதில் சாரும். இந்த உரிமைகளை "மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க இயலாத, மறுக்க முடியாத சில உரிமைகளாக"மனித உரிமைகள் என்றால் என்ன?கருதப்படுகின்றன. இனம், சாதி, நிறம், சமயம், பால், தேசியம், வயது, உடல் உள வலு ஆகியவற்றுக்கு அப்பால் ஒவ்வொரு தனி மனிதருக்கும் இருக்கும் இந்த அடிப்படை உரிமைகள், மனிதர் சுதந்திரமாக, சுமுகமாக, நலமாக வாழ அவசியமான உரிமைகளாகக் கருதப்படுகின்றன. மனித உரிமைகள் என்பவற்றுள் அடங்குவதாகக் கருதப்படும் குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுள், வாழும் உரிமை, சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், சட்டத்தின் முன் சமநிலை, நகர்வுச் சுதந்திரம், பண்பாட்டு உரிமை, உணவுக்கான உரிமை, கல்வி உரிமை என்பன முக்கியமானவை. மனிதனின் இன்றியமையாத தேவைகளான நீர், நிலம், காற்று. உறைவிடம், பிறப்பு மற்றும் வாழுதல் போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டும் அந்தந்த நாட்டின் மூலச்சட்டங்களையும் கருத்தில் கொண்டும் இந்த மனித உரிமைகள் வடிவமைக்கப்படுகின்றன.

அடிப்படை மனித உரிமைகள் என்பது தொடர்பாக பல்வேறு வெளிப்படுத்தல்கள் உள்ளன. அனைத்துலக மட்டத்தில் ஐக்கிய நாடுகளால் வெளியிடப்பட்ட உலக மனித உரிமைகள் சாற்றுரைகள் அடிப்படையாக பெரும்பான்மை நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த சான்றுரை குடிசார் அரசியல் உரிமைகளையும், பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் பற்றியும் எடுத்துரைக்கிறது. பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் International Covenant on Economic, Social and Cultural Rights என்ற சான்றுரையிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் உரிமைகளின் சட்டம், கனடாவின் உரிமைகள் சுதந்திரங்களுக்கான கனடிய சாசனம் போன்று பல்வேறு நாடுகளில் மனித உரிமைகளை வெளிப்படுத்தி சட்டங்கள் உள்ளன. பின்வருவன இப்படி பல வெளிப்படுத்தல்களில் அடிப்படை மனித உரிமைகளாக கருதப்படுவையாகும்.

வாழும் உரிமை, உணவுக்கான உரிமை, நீருக்கான உரிமை, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்/பேச்சுரிமை, சிந்தனைச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம், தகவல் சுதந்திரம், சமயச் சுதந்திரம், அடிமையாகா உரிமை, சித்தரவதைக்கு உட்படா உரிமை, தன்னாட்சி உரிமை/சுயநிர்ணயம், ஆட்சியில் பங்குகொள்ள உரிமை, நேர்மையான விசாரணைக்கான உரிமை, நகர்வு சுதந்திரம், கூடல் சுதந்திரம், குழுமச் சுதந்திரம்கல்வி உரிமை, மொழி உரிமை, பண்பாட்டு உரிமை, சொத்துரிமை.

இந்த விவரங்கள் பல ஆயிரம் ஆண்டுகளை உள்ளடக்கியுள்ளதுடன், பதிவு செய்யப்பட்ட வரலாற்றுக் காலம் முழுவதிலும் சமய, பண்பாட்டு, மெய்யியல், சட்டம் ஆகிய துறைகளின் வளர்ச்சிகளினால் வளம்பெற்றுள்ளது.

1215 ஆம் ஆண்டில் ஆங்கிலேயரால் வெளியிடப்பட்ட "சுதந்திரத்துக்கான பெரும் பட்டயம்" (Magna Carta Libertatum) ஆங்கிலச் சட்ட வரலாற்றில் முக்கியமானது ஆகும். இதனால் இது இன்றைய அனைத்துலகச் சட்டம், அரசமைப்புச் சட்டங்கள் ஆகியவை தொடர்பிலும் மிகவும் முக்கியமானதாக உள்ளது.

ஆனாலும், நவீன மனித உரிமைச் சட்டத்தின் பெரும் பகுதியும், மனித உரிமை என்பதற்கான நவீன விளக்கங்களின் அடிப்படையும், ஒப்பீட்டளவில் அண்மைக்கால வரலாறாகும்!

**– ஆனைமலை முத்துராஜ்**

# வாட்டர் பாட்டிலின் மூடி வெவ்வேறு நிறத்தில் இருக்க காரணம் என்ன?

நாம் எங்கு சென்றாலும் முதலில் செய்யும் செயல் எதுவென்றால் ஒரு தண்ணீர் பாட்டிலை வாங்குவதுதான். இதில் நாம் கண்மூடித்தனமாக செய்யும் பெரிய தவறு என்னவென்றால் அது எந்த நிறுவனத்துடையது, அதிலுள்ள உள்ளடக்கம் என்ன போன்றவற்றை சோதிக்காமல் அப்படியே வாங்குவது. நாம் சோதிக்க வேண்டிய மற்றோர் விஷயம் தண்ணீர் பாட்டிலின் மூடி நிறம்.

வாட்டர் பாட்டிலின் மூடிகளின் நிறம் ஒரு அந்த தண்ணீர் பாட்டிலின் அடையாளமாக செயல்படுகிறது, அதில் உள்ள நீர் வகை பற்றிய சிறிய குறிப்புகளை வழங்குகிறது. இந்த வண்ணக் குறியீடுகள் முதல் பார்வையில் முக்கியமற்றதாகத் தோன்றினாலும், அவை பல்வேறு வகையான நீரைக் கண்டறிவதில் இன்றியமையாத செயல்பாட்டைச் செய்கின்றன, ஒவ்வொன்றும் குறிப்பிட்ட விருப்பத்தேர்வுகள் மற்றும் பயன்பாடுகளை வழங்குகின்றன. காரத்தன்மை முதல் சுவை வரை, வாட்டர் பாட்டில் மூடியின் நிறங்கள் அவற்றின் தனித்துவமான பண்புகளை வெளிப்படுத்துகின்றன. இது நுகர்வோர் சரியான முடிவுகளை எடுக்க அனுமதிக்கிறது.

அல்கலைன் நீர் கருப்பு நிற மூடிகளைக் கொண்ட வாட்டர் பாட்டில் அல்கலைன் நீரைக் கொண்டிருக்கும். அல்கலைன் நீர் அதன் உயர் ஜீபி க்கு அறியப்படுகிறது, இது உடலில் அமிலத்தன்மையை எதிர்க்கும் மற்றும் சாத்தியமான ஆரோக்கிய நன்மைகளை வழங்குவதாக கருதப்படுகிறது. உள்ளே இருக்கும் நீரின் காரத் தன்மையைக் குறிக்க கருப்பு மூடி ஒரு காட்சிக் குறியீடாக செயல்படுகிறது.

ஸ்பிரிங் வாட்டர் நீல நிற மூடிகள் நீரூற்று நீருடன் ஒத்ததாக இருக்கின்றன, இது இயற்கை நீரூற்றுகளிலிருந்து நேரடியாக பெறப்படுகிறது. நீரூற்று நீர் அதன் தூய்மை மற்றும் தாதுக்கள் நிறைந்த உள்ளடக்கத்திற்காக மதிப்பிடப்படுகிறது, இது மண்ணிலிருந்து பெறப்படுகிறது. நீல நிறம் அமைதியை வெளிப்படுத்துகிறது.

பதப்படுத்தப்பட்ட நீர் பதப்படுத்தப்பட்ட அல்லது வடிகட்டப்பட்ட தண்ணீரைக் கொண்டிருக்கும் பாட்டில்கள் பொதுவாக வெள்ளை மூடிகளைக் கொண்டிருக்கும். பதப்படுத்தப்பட்ட நீர் அசுத்தங்களை அகற்ற வடிகட்டப்படுகிறது, இது ஒரு மிருதுவான சுவையை உருவாக்குகிறது. நீரூற்று நீரின் கனிமச்சத்துக்கள் இதில் இல்லாவிட்டாலும், வெள்ளை மூடியைக் கொண்ட நீரை எளிமையான, புத்துணர்ச்சியூட்டும் நீரேற்றம் தேர்வை விரும்புவோர் பருகலாம்.

சுவையான நீர் பச்சை நிற மூடிகள் நீர் நிறமாலைக்கு ஒரு சுவையை சேர்க்கின்றன, இது சுவையான நீரின் இருப்பைக் குறிக்கிறது. சிட்ரஸ் மற்றும் வெப்பமண்டல கலவைகளின் குறிப்புகள் கொண்ட சுவையான நீரான இது, நீரேற்றத்தில் ஒரு இனிமையான திருப்பத்தை வழங்குகிறது. பச்சை நிறம் இயற்கையான சுவைகளின் ஒருங்கிணைப்பைக் குறிக்கிறது. சிவப்பு மூடிகள்: எலக்ட்ரோலைட்மேம்படுத்தப்பட்ட நீர் சிவப்பு மூடிகள் உடல் உழைப்பு அல்லது நீரிழப்பு போது இழந்த அத்தியாவசிய தாதுக்களை மீட்டெடுக்கும் நோக்கம் கொண்ட எலக்ட்ரோலைட்மேம்படுத்தப்பட்ட நீரைக் குறிக்கிறது. எலக்ட்ரோலைட் உட்செலுத்தப்பட்ட நீர் நீரேற்றம் மற்றும் எலக்ட்ரோலைட் சமநிலையை ஊக்குவிக்கிறது, இது விளையாட்டு வீரர்கள் மற்றும் உடற்பயிற்சி பிரியர்களுக்கு பிரபலமான தேர்வாக அமைகிறது.

வைட்டமின்செறிவூட்டப்பட்ட நீர் மஞ்சள் மூடிகள் வைட்டமின்செறிவூட்டப்பட்ட நீர் பாட்டிலில் இருப்பதைக் காட்டுகின்றன, இந்த நீர் அத்தியாவசிய வைட்டமின்கள் மற்றும் ஊட்டச்சத்துக்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்த பானங்கள், வைட்டமின் சி முதல் பிகாம்ப்ளக்ஸ் கலவைகள் வரை, தினசரி ஊட்டச்சத்து உட்கொள்ளலை அதிகரிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் தாகத்தை திருப்திப்படுத்துகிறது. மஞ்சள் நிறம் வைட்டமின்உட்செலுத்தப்பட்ட நீரேற்றத்தின் ஆற்றல் மற்றும் ஆரோக்கிய நன்மைகளைக் குறிக்கிறது.





# தாழ்வு மனப்பான்மை வேண்டாமே!

எண்ணங்கள் சக்தி வாய்ந்தவை என்பதில் சந்தேகமே இல்லை. திருவள்ளுவர், புத்தர் முதல் இன்றைய ஆராய்ச்சியாளர்கள் வரை அடித்துச் சொல்லும் இந்த விஷயம் எந்த அளவு உண்மை?

சமீபத்தில் சில வகை எண்ணங்கள் நம் மூளையைச் சுருங்க வைக்கின்றன என்று ஆராய்ச்சிப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டு இருக்கின்றன என்கிற அளவுக்கு உண்மை. மாண்ட்ரீல் (Montreal) நகரத்தின் புகழ் பெற்ற மெக்கில் (McGill) பல்கலைகழகத்தில் 15 ஆண்டுகளாக மூளை ஆராய்ச்சி செய்து வரும் டாக்டர் எஸ்.லூபியன் (Dr.S.Lupien) சிலவகை எண்ணங்கள் மனித மூளையைக் கிட்டத்தட்ட 20 சதவீதம் வரை சுருங்கச் செய்கிறது என்பதைக் கண்டறிந்துள்ளார். தொடர்ந்து தாழ்வு மனப்பான்மை எண்ணங்களைக் கொண்டவர்கள் மூளை காலப்போக்கில் 20 சதவீதம் வரை சுருங்குகிறது என்றும் புதியனக் கற்றுக் கொள்வதிலும், நினைவாற்றலிலும் இத்தகைய மனிதர்கள் மிகவும் பின் தங்கி விடுகிறார்கள் என்பதையும் அவர் கண்டுபிடித்துள்ளார்.

அது மட்டுமல்ல, தங்களைப் பற்றி உயர்ந்த அபிப்பிராயம் இல்லாதவர்கள் தீய பழக்கங்களுக்கு சீக்கிரமாக அடிமையாகிறார்கள், அந்தப் பழக்கங்களில் இருந்து மீள முடியாமல் அவதிப்படுகிறார்கள், கான்சர், இருதய நோய், நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்களுக்கு அதிகமாக ஆளாகிறார்கள் என்றெல்லாம் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

எனவே உங்களைப் பற்றிக் குறைவாக எண்ணுவதை நிறுத்துங்கள். தாழ்வு மனப்பான்மையைப் போல உங்களை வேறெதுவும் முடங்கச் செய்ய முடியாது.

தாழ்வு மனப்பான்மை ஒரு விதத்தில் தெய்வத்தையே குறைத்து மதிப்பிடுவதைப் போலத் தான். கடவுள் பயனில்லாத மனிதர்களைப் படைத்திருக்கிறார் என்பதே அவரை இழிவு படுத்துவது போலத் தானே.

உங்கள் தாழ்வு மனப்பான்மை சிலரை உங்களுடன் ஒப்பிட்டு உருவான ஆதாரப்பூர்வமான உண்மையாக நீங்கள் ஒருவேளை கருதலாம். அதையும் மேலும் ஆழமாக சிந்தித்தால் உண்மை அல்ல என்று நீங்கள் உணரலாம்.

ஒரு கோடீஸ்வரன் தன் பிள்ளைகளுக்கு நிறைய சொத்துக்களை விட்டுச் சென்றிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை அறிந்து அதைத் தனக்கு வேண்டியபடி பயன்படுத்தி மகிழ்ச்சியுடன் வாழ்பவன் தன்னம்பிக்கை உடையவன், சாதனையாளன். தனக்கு சொத்து இருப்பதே தெரியாமல், சொத்துக் கிணற்றில் போட்டக் கல்லாக எங்கோ இருக்க, வறுமையில் உழல்பவன் தன்னம்பிக்கை அற்றவன், தோல்வியாளன். எனவே உண்மையில் இருவரும் செல்வந்தர்களே என்றாலும் அறிந்தவன், அறியாதவன் என்பதில் தான் வித்தியாசம் உள்ளது.

உங்கள் சொத்து உங்களுக்குள் உறங்கிக் கிடக்கின்றது. அதை அறியாமல் உங்களிடம் ஒன்றும் இல்லை என்று முடிவுக்கு வருவது அறியாமையே. கடவுள் வெறுமைகளைப் படைப்பதில்லை. அப்படி நினைத்து அவரையும் உங்களையும் அவமதித்துக் கொள்ளாதீர்கள். தாழ்வு மனப்பான்மையால் உங்கள் மூளையைச் சுருக்கி, திறமையைச் சுருக்கி, வாழ்க்கையை அர்த்தமற்றதாக்கி விடாதீர்கள். உங்களுக்கென இறைவன் உள்ளே வைத்திருக்கும் தனித் திறமையைக் கண்டுபிடித்து பயன்படுத்த ஆரம்பியுங்கள். தாழ்வு மனப்பான்மையும், தேக்க நிலையும் சூரியன் முன் பனி போல காணாமல் போவதைக் காண்பீர்கள்.



# குடை சாய்ந்த சுமைதாங்கி!

## சிறுகதை

எல்லா குடும்பத்திலும் இப்படி ஒரு கேரக்டர் இருக்கும். அம்மா காஃபி" என்றாள் அனு...

"அம்மா எனக்கு டீ தான் வேணும்" என்றான் அருண்.

"சரி சரி உங்க அப்பாவுக்கு ஓட்ஸ் கஞ்சி குடுத்துட்டு வரேன்" என்ற பத்மா வேகவேகமாக இயங்கி வேலைக்கு செல்லும் மகனுக்கும், காலேஜ் செல்லும் மகளுக்கும் கேட்டத்தை கொடுத்துவிட்டு ஐந்து நிமிடம் உட்காரலாம் என்று வந்து சோஃபாவில் அமர்ந்தாள்.

வயிற்றில் பசி கிள்ளியது. சாப்பிடலாமா என்று ஒரு மனம் நினைக்க, இன்னும் எத்தனை எத்தனை வேலைகள் வரிசை கட்டி நிற்கின்றது என்ற எண்ணம் வந்து அதை தடுத்தது.

எல்லோருக்கும் கொடுத்தது போக மீதமிருந்த ஆறிய காஃபியை தூக்கி வாயில் ஊற்றி கொண்டு மீண்டும் வேலையை தொடர்ந்தாள்.

தினமும் கணவன் நாகராஜனுக்கு காலையில் ஓட்ஸ், மதியம் கீரை, சப்பாத்தி, ஒரு பொரியல் இவை அனைத்தும் கூடிய சாப்பாடு.

மாலையில் பிஸ்கட், டீ வாக்கிங் சென்று விட்டு வருவதற்குள் ஏதாவது ஒரு சிற்றுண்டி தயாரித்து வைத்திருக்க வேண்டும், இல்லை என்றால் வானத்துக்கும் பூமிக்கும் குதிப்பார்.

வளர்ந்த பிள்ளைகள் இருந்தாலும் தனி அறையில் தான் படுக்கை, இருந்தாலும் பொறுத்துக் கொண்டாள்.

ஒருநாள் சமையல் செய்யும் போது தலைசுற்றி மயக்கம் வரும்போல் இருக்க மெதுவாக கணவனை அழைத்துச் சொன்னாள்,

அதற்கு "தல சுத்தலுக்கெல்லாம் பயமா? சரி, எனக்கு கொஞ்சம் சுக்கு கசாயம் வச்சுகுடு தொண்டை லேசா கரகரன்னு இருக்கு" என்று கட்டளை இட்டு சென்றான்.

தனக்கென்று வந்தால் லேசானதுகூட கவனிக்கப்பட வேண்டியதாகிறது.

எனக்கென்று வந்தால் கவனிக்க படவேண்டியது கூட லேசானதாகிப் போகிறது இவருக்கு என்று நினைத்தபடியே வேலையை தொடர்ந்தாள்.

மகனுக்கு திருமண பேச்சு வீட்டுக்கு மருமகளும் வந்தாள் தாங்குவாள் என்று நினைத்துக்கொண்டு வேகமாக செயலில் இறங்கினாள்.

மகனுக்கு திருமணம் முடிந்து ஆறு மாதங்கள் போனதே தெரியவில்லை. இனி புதிய மருமகள் பழைய மருமகளாக மாறி வேலை செய்வாள் என்று எதிர்பார்த்து காத்திருக்க, அவளோ, பத்மா தரும் காபிக்கு கால்மேல் கால் போட்டு கொண்டு காத்திருந்தாள். நொந்து போன மனம் உடம்பு என்ற வண்டியை இழுக்க முடியாமல் இழுத்தது.

இப்போதெல்லாம் ஏனோ அடிவயிற்றில் வலி, அதோடு இடுப்பு வலியும் சேர்ந்து கொள்கிறது, எதைப்பார்த்தாலும் கோபமும், ஆத்திரமும் வருகிறது.

அடிக்கடி மனச்சோர்வு வேறு, யாரிடம் சொல்வது? யாருக்கு தான் நேரம் இருக்கிறது நான் சொல்வதைத்

கேட்க.. மனதில் ஒரு வெறுமை வந்து ஒட்டிக் கொண்டது.

அந்தநேரம் எதிர்வீட்டு தாயம்மாள் பசும்பால் கொண்டுவர அவளே கேட்டாள் "ஏன்மா ஒரு மாதிரியா இருக்குற?" என்று, மனதில் இருந்ததை சொல்ல "அது நிக்கற நேரம் அதான் அப்படி" என்றாள். ஒருவேளை அப்படியும் இருக்கலாம் என்று வலியோடு நாட்களை கடத்தினாள். ஒருநாள் படுக்கையை விட்டே எழ முடியவில்லை மகளை அழைக்க, "இன்னைக்கு காலேஜ்டே நீ தயவுசெஞ்சு சீக்ரமா எனக்கு சாப்பிட ஏதாவது செஞ்சுகுடு"

"என்னால முடியலைடி"

"ஆமா நான் அழகா ட்ரெஸ் பண்ணிக்கிட்டு காலேஜ் போலாம்ன்னு நெனச்சா நீ என்னம்மா இப்படி பண்ற?"



"சரிசரி கத்தாத உங்கப்பா அதுக்கு வேற எதையாவது சொல்லப்போறாரு" என்று எழுந்து அன்றைய வேலைகளை முடித்து படுத்தவளுக்கு உடம்பு ஏதேதோ செய்தது. மகனிடம் சொன்னாள்,

அவனுக்கு நேரம் இல்லை என்றவன், தந்தையிடம் டாக்டரிடம் அழைத்துச் செல்லுங்கள் என்று கொஞ்சம் அக்றையோடு சொல்லிவிட்டு சென்றான்.

மாலை எப்போது வரும் என்று காத்திருந்தாள், மீண்டும் தலைசுற்ற படுத்தவள்தான் லேசாக நினைவுவர, கண்விழித்து பார்த்தாள். அது மருத்துவமனை, பக்கத்தில் யாரோ ஒருடாக்டர் பேசுவது கேட்டது "என்னங்க நாகராஜன் இவ்வளவு கேர்லஸ்ஸாஇருந்திருக்கிங்க?

அவங்க என்ன மனுஷியா இல்ல மிஷினா? அவங்களுக்கு இப்போ எடுத்த டெஸ்ட்ல சுகர், பிபி, கொலஸ்டிரால் எல்லாம் இருக்கு, அப்புறம் யூட்ரஸ்ல ப்ராப்ளம், தைராய்டு அதிகமா இருக்கு, ரத்தம் கம்மியா, ஊட்டச்சத்து குறைபாடா இருக்கு. அவங்க உங்ககிட்ட எதுவுமே சொல்லையா? இல்ல நீங்க கவனிக்கலையா? நீங்க எல்லாம் அவங்களபத்தி கவலையே படாம உங்க உடம்ப மட்டும் பத்திரமா, அக்ரையா பாத்துகிட்டு, அவங்கவங்க சுகம் முக்கியம்ன்னு இருந்திருக்கிங்க.

ஏங்க வருஷத்துக்கு ஒரு முறையாவது அவங்கள டாக்டர்கிட்ட காட்டவேணாமா?

இப்போ அவங்கள நான் எப்படி சரிபண்ணி, எத்தனை நாளைக்கு இங்கேயே கவனிச்சி...!!

ஹூம்...! ஒண்ணும் புரியலை"!

அதற்கெல்லாம் அவசியம் இல்லாமல் பத்மா காற்றில் கரைந்தே போனாள். யாருக்கும் எந்த குற்ற உணர்வுமில்லாமல், இதெல்லாம் ஒரு குடும்ப "தலைவியின்" கடமைதானே? என்று அவளை வருத்தி வேலை வாங்கியவர் இவர்கள் . சாப்பிடும் வேளையில் எப்போதாவது அவளின் நினைவு வந்துபோனது எல்லோருக்கும்..

இப்போது அவர்கள் வீட்டில் எல்லாம் ஒழுங்காய் நடக்கின்றது. மருமகள் வேறுவழியின்றி சமைக்க, மாமனார், அவள் என்ன செய்தாலும் வாயை மூடிக்கொண்டு சாப்பிட, மகன் சமையலறையில் மனைவிக்கு ஒத்தாசை செய்ய... மகள் அவள் வேலைகளை அவளே செய்துகொள்ள நாட்கள் சுறுசுறுப்பாக நகருகிறது...

எங்கே கேட்கும் அவள் குரல்?

யாருக்கு கேட்கும் அவள் குரல்?

குடும்ப உறுப்பினர்களுக்கு:நம் குடும்பத்தை தாங்கும் தலைவியின் தலையில் எல்லா பாரத்தையும் போட்டுவிட்டு நாம் சுகமாக இருக்க விரும்புகிறோம்.

அவளும் ஒரு சாதாரண மனுஷி தான், அவளுக்கும் ஆசாபாசங்கள், வேதனை வலிகள் இருக்கும்.

ஏனென்றால் ஒரு வீடோ, நாடோ அதற்கு ஆதாரமாக இருப்பது பெண்களே!!

# கொரோனா உடலை பிரேத பரிசோதனை செய்த சிங்கப்பூர்!



COVID-19 உடலை பிரேத பரிசோதனை (பிரேத பரிசோதனை) செய்த உலகின் முதல் நாடாக சிங்கப்பூர் மாறியுள்ளது. முழுமையான விசாரணைக்குப் பிறகு, COVID-19 ஒரு வைரஸாக இல்லை, மாறாக கதிர்வீச்சுக்கு ஆளாகி இரத்தத்தில் உறைந்து மனித மரணத்தை ஏற்படுத்தும் ஒரு பாக்டீரியாவாக இருப்பது கண்டறியப்பட்டது.

COVID-19 நோய் இரத்தக் கட்டிகளை ஏற்படுத்துகிறது, இது மனிதர்களில் இரத்தக் கட்டிகளுக்கு வழிவகுக்கிறது, மேலும் நரம்புகளில் இரத்தம் உறைந்து, ஒரு நபர் சுவாசிக்க கடினமாகிறது; ஏனெனில் மூளை, இதயம் மற்றும் நுரையீரல் ஆக்ஸிஜனைப் பெற முடியாது, இதனால் மக்கள் விரைவாக இறக்கின்றனர்.

சுவாச சக்தி பற்றாக்குறைக்கான காரணத்தைக் கண்டறிய, சிங்கப்பூரில் உள்ள மருத்துவர்கள் WHO நெறிமுறையைக் கேட்கவில்லை, COVID-19 இல் பிரேத பரிசோதனை செய்தனர். மருத்துவர்கள் கைகள், கால்கள் மற்றும் உடலின் பிற பாகங்களைத் திறந்து கவனமாக பரிசோதித்த பிறகு, இரத்த நாளங்கள் விரிவடைந்து இரத்தக் கட்டிகளால் நிரப்பப்பட்டிருப்பதைக் கவனித்தனர், இது இரத்த ஓட்டத்தைத் தடுக்கிறது மற்றும் உடலில் ஆக்ஸிஜனின் ஓட்டத்தையும் குறைத்து நோயாளியின் மரணத்திற்கு வழிவகுக்கிறது. இந்த ஆராய்ச்சியைப் பற்றி அறிந்ததும், சிங்கப்பூரின் சுகாதார அமைச்சகம் உடனடியாக கோவிட்19 சிகிச்சை நெறிமுறையை மாற்றி, அதன் பாசிட்டிவ் நோயாளிகளுக்கு ஆஸ்பிரின் வழங்கியது. நான் 100 மி.கி மற்றும் இம்ரோமேக் எடுத்துக்கொள்ளத் தொடங்கினேன். இதன் விளைவாக, நோயாளிகள் குணமடையத் தொடங்கினர், அவர்களின் உடல்நலம் மேம்படத் தொடங்கியது. சிங்கப்பூரின் சுகாதார அமைச்சகம் ஒரே நாளில் 14,000க்கும் மேற்பட்ட நோயாளிகளை வெளியேற்றி வீட்டிற்கு அனுப்பியது.

அறிவியல் கண்டுபிடிப்புகளின் ஒரு காலத்திற்குப் பிறகு, சிங்கப்பூரில் உள்ள மருத்துவர்கள், இந்த நோய் ஒரு உலகளாவிய புரளி என்று கூறி சிகிச்சை முறையை விளக்கினர், "இது இரத்த நாளங்களுக்குள் உறைதல் (இரத்த உறைவு) மற்றும் சிகிச்சை முறை தவிர வேறில்லை.

அழற்சி எதிர்ப்பு மற்றும் ஆன்டிகோகுலண்டுகளை (ஆஸ்பிரின்) எடுத்துக் கொள்ளுங்கள்.

இந்த நோயைக் குணப்படுத்த முடியும் என்பதை இது குறிக்கிறது.

சிங்கப்பூரின் பிற விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, வென்டிலேட்டர்கள் மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு (ICU) ஒருபோதும் தேவையில்லை. இந்த நோக்கத்திற்கான நெறிமுறைகள் ஏற்கனவே சிங்கப்பூரில் வெளியிடப்பட்டுள்ளன.

சீனா ஏற்கனவே இதை அறிந்திருக்கிறது, ஆனால் அதன் அறிக்கையை ஒருபோதும் வெளியிடவில்லை.

இந்தத் தகவலை உங்கள் குடும்பத்தினர், அண்டை வீட்டார், அறிமுகமானவர்கள், நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள், இதனால் அவர்கள் கோவிட்19 பற்றிய பயத்தை அகற்றி, இது ஒரு வைரஸ் அல்ல, ஆனால் கதிர்வீச்சுக்கு மட்டுமே ஆளான பாக்டீரியா என்பதை உணர முடியும். மிகக் குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்கள் மட்டுமே கவனமாக இருக்க வேண்டும். இந்த கதிர்வீச்சு வீக்கம் மற்றும் ஹைபோக்ஸியாவையும் ஏற்படுத்துகிறது. பாதிக்கப்பட்டவர்கள் ஆஸ்பிரின்100 மி.கி மற்றும் அப்ரோனிக் அல்லது பாராசிட்டமால் 650 மி.கி. எடுத்துக்கொள்ள வேண்டும்.

# தமிழ்நாட்டு வளர்ச்சியில் மாவட்டங்களின் பங்கு!



**த**மிழ்நாட்டில் இடம் பெற்றுள்ள மாவட்டங்கள் 38.

அரியலூர், செங்கல்பட்டு, சென்னை, கோவை, கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், ராணிபேட்டை, சேலம், சிவகங்கை, தென்காசி, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருச்சி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாருர், வேலூர், விழுப்புரம், விருதுநகர், மயிலாடுதுறை.

ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் மாநிலத்தின் வளர்ச்சிக்கு ஏதாவது ஒரு வகையில் பங்கு இருக்கும் என்றாலும் சில குறிப்பிடத்தக்க மாவட்டங்களில் மூலம் வருகின்ற வருவாய் மாநிலத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகிறது.

இந்தியாவின் பணக்கார மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில்உள்ளது! தமிழ்நாடு ஒரு வளமான மாநிலமாக இந்தியாவில் இருப்பதற்கு தொழில்துறை, ஏற்றுமதி, விவசாயம் என அனைத்திலும் தமிழகம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதுதான் காரணம்.

ஆனால் இந்த நற்பெயர் எல்லாமே தமிழகத்தின் மாவட்டங்களை தான் சேரும். தொழில்துறை, உற்பத்தி, ஆலைகள், ஏற்றுமதி, விவசாயம் என மாவட்டத்தின் வருமானம் கணக்கிடப்படுகிறது. மொத்த வருமானத்தையும் ஒன்று கூட்டி அதனை அங்கு வாழும் மக்களின் எண்ணிக்கை கொண்டு வகுத்தால் சராசரி தனி நபர் வருமானம் தெரிந்துவிடும். அதில் எது மிகுதியாக இருக்கிறதே அதுவே பணக்கார மாவட்டமாகும்.

முதலிடத்தில் ஏன் சென்னை இல்லை. பல்வேறு தொழில் துறை நிறுவனங்களும், உற்பத்தி ஆலைகளும், மேலை நாட்டு கலாச்சாரத்துடன் அதிக சம்பளம் பெற்று வாழும் மக்கள் சென்னையில் தான் அதிகம் இருக்கின்றனரே, ஏன் சென்னை முதலிடத்தில் வரவில்லை என்று நீங்கள் நினைக்கலாம்.

சென்னை எந்த அளவிற்கு வளமான மக்களை கொண்டுள்ளதோ அதே அளவிற்கு ஏழை மக்களையும் நடுத்தர மக்களையும் கொண்டுள்ளது. அதிகப்படியான மக்கள் இங்கு வாழ்வதால் தனி நபர் வருமானமும் குறைகிறது.கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் மக்கள் தான் அதிக வசதியாக வாழுகின்றனர். தமிழ்நாட்டில் அரசுப் பணிகளில் அதிகம் இருப்பது கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் தான், அதே மாதிரி இந்த மாவட்ட மக்கள் கேரள அரசுப்



பணிகளிலும் நிறைய பேர் பணிபுரிகிறார்கள். தமிழ்நாட்டில் இருந்து வெளிநாடுகளில் வேலை பார்ப்பதும் இந்த ஊர் மக்கள் தான். ரப்பர் ஏற்றுமதியில் முன்னணியில் இருப்பதுடன், மீன்வளம், விவசாயம், சுற்றுலா என எல்லாவற்றிலும் கன்னியாகுமரி கலக்கி வருகிறது. கன்னியாகுமரியின் தனிநபர் வருமானம் ரூ.81,094, இது தான் தமிழகத்திலேயே தனி நபர் வருமானம் ஆகும்.திருப்பூர் இந்தியாவின் பின்னலாடை தொழில் மையமாக உள்ளது. இந்தியாவின் இந்த பின்னலாடை தலைநகரில் இந்தியா, இலங்கை மற்றும் நேபாளத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 5 லட்சம் தொழிலாளர்கள் உள்ளனர். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு சிறிய கிராமங்களால் சூழப்பட்ட ஒரு சிறிய நகரமாக இருந்த திருப்பூர் இப்போது இரண்டாவது பணக்கார மாவட்டமாக வளர்ந்துள்ளது. திருப்பூரின் தனிநபர் வருமானம் ரூ.72,479 ஆகும்.


திருவள்ளூர் மாவட்டத்தின் பொருளாதாரம் பெரும்பாலும் விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்பாடுகளை நம்பியே உள்ளது. இந்த மாவட்டத்தின் மொத்த தொழிலாளர்களில் சுமார் நாற்பத்தேழு சதவீதம் பேர் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அது மட்டுமே திருவள்ளூரின் வாழ்வாதாரம் இல்லை, ஆவடி, அம்பத்தூர் தொழில்பேட்டைகளில் இருக்கும் மெட்ராஸ் ரிஃபைனரீஸ், மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸ், மணலி பெட்ரோ கெமிக்கல்ஸ், விசிதி, அசோக் லெய்லேண்ட், பிரிட்டானியா, ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் போன்ற மாவட்டங்கள் திருவள்ளூரை மூன்றாவது பணக்கார மாவட்டமாக மாற்றியுள்ளது. ரூ.70,778 திருவள்ளூர் மாவட்டத்தின் தனி நபர் வருமானமாகும்.

விருதுநகர் மாவட்டம் ரூ.70,689 தனி நபர் வருமானத்தை கொண்டுள்ளது. விருதுநகர் நான்காவது இடத்தில் நம்மில் பலருக்கும் ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால், ஆயில், காபி, தானியங்கள் மற்றும் மிளகாய் உற்பத்தி செய்வதுடன், ஸ்பின்னிங் மில்கள், கைத்தறி ஆலைகளுடன் விருதுநகர் நான்காம் இடத்தை பிடித்துள்ளது.

காஞ்சிபுரம் நீண்ட காலமாக இந்தியாவின் புனித நகரமாக கிட்டத்தட்ட ஆயிரம் கோயில்களைக் கொண்டுள்ளது, மெதுவாக அது ஒரு சாதகமான வணிக தலமாகவும் மாறி வருகிறது. முக்கியமாக விவசாயம் மற்றும் பட்டு தொழில் துறைகள் காஞ்சிபுரத்தின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கின்றன. காஞ்சிபுரத்தின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யும் மற்றொரு முக்கிய தொழில் சுற்றுலாத் துறையாக இருக்கிறது. காஞ்சிபுரத்தின் தனிநபர் வருமானம் ரூ.70,667 ஆகும்.

இதே அடிப்படையில் கோவை மாவட்டம் ரூ.65,781, திருச்சி மாவட்டம் ரூ.65,011, தூத்துக்குடி மாவட்டம்ரூ 63,467, ஈரோடு மாவட்டம் ரூ.61,631, கரூர்மாவட்டம் ரூ.61,181, *நாமக்கல்மாவட்டம் ரூ.58,133 தனிநபர் வருமானத்தை கொண்டுள்ளது

## மித்ரா டாக்கீஸ்




டி ராஜேந்தர் மகன் சிலம்பரசன் சின்ன சிறுவனாக அறிமுகம் ஆன நாளிலிருந்து இன்று வரை திரை உலகில் சிறப்பாக வலம் வந்து கொண்டிருக்கிறார். சினிமாவிலும் தனிப்பட்ட முறையிலும் ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டாலும் மீண்டும் அதிலிருந்து மீண்டு வந்து பல்வேறு வெற்றி படங்களை தருவது தொடர்ச்சியாக நடந்து வருகிறது.

அந்த வகையில் இயக்குனர் மணிரத்தினம் இயக்கத்தில் கமலஹாசன் உடன் இணைந்து நடித்த தக் லைப் படத்தின் வெளியீட்டு விழா ட்ரெய்லர் காட்சிகள் ஆகியவற்றில் அந்த படம் அவரது நடிப்பை உச்சத்துக்கு கொண்டு சென்றது. இது தொடர்ந்து மேலும் 4 படங்கள் அவருக்கு வரிசையாக வந்து கொண்டிருக்கிறது.

அடுத்ததாக எஸ்டிஆர் 49 படத்தை ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்க இருக்கிறார். டிராகன் படத்தில் நடித்த கயாடு லோஹர் சிம்புக்கு ஜோடியாக நடிக்க இருக்கிறார். மேலும் இந்த படத்தை ஆகாஷ் பிரபாகரன் தயாரிக்கிறார். சந்தானம் நீண்ட வருடங்களுக்கு பிறகு சிம்புக்காக காமெடி கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

சிம்புவின் 50 ஆவது படத்தை தேசிங்கு பெரியசாமி இயக்குகிறார். இந்த படத்தின் அறிவிப்பு வெளியான நிலையில் படப்பிடிப்பு இன்னும் ஆரம்பிக்காமல் இருக்கிறது. இதற்கு அடுத்தபடியாக அஸ்வத் மாரிமுத்து இயக்கத்திலும் சிம்பு நடிக்க உள்ளார்.இதைத்தொடர்ந்து மீண்டும் மணிரத்னத்துடன் சிம்பு இணைய இருக்கிறார். இந்த படத்தில் ருக்மணி கதாநாயகியாக நடிக்க உள்ளார். மேலும் லைக்கா நிறுவனம் இந்த படத்தை தயாரிக்கிறது. இவ்வாறு சிம்பு அடுத்தடுத்த படங்களில் கமிட்டாகி நடித்து வருகிறார்.

தமிழ் சினிமாவில் ஆரம்பத்தில் காமெடி கதாபாத்திரங்களில் மட்டுமே நடித்து தற்போது கதாநாயகனாக உயர்ந்துள்ளவர் நடிகர் சூரி. இவரது நடிப்பில் 'மாமன்' படம் வெளியானது. இதனை விலங்கு வெப் தொடரை இயக்கி புகழ்பெற்ற பிரசாந்த் பாண்டிராஜ் இயக்கியுள்ளார்.




லார்க் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ள இப்படத்தில் சூரிக்கு ஜோடியாக ஐஸ்வர்யா லட்சுமி நடித்துள்ளார். மேலும் சுவாசிகா, ராஜ்கிரண், பால சரவணன், பாபா பாஸ்கர் என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளது. தாய் மாமனுக்கும், மருமகனுக்கும் இடையிலான உறவை குடும்பங்கள் கொண்டாடும் விதமாக உணர்வுபூர்வமாக காட்டியுள்ளனர்

வெற்றிமாறன் இயக்கிய விடுதலை 2 திரைப்படத்திற்கு பிறகு விஜய் சேதுபதி நடித்துள்ள திரைப்படம் 'ஏஸ்'. ஆறுமுக குமார் இயக்கி இந்த படத்தில், விஜய் சேதுபதியுடன் ருக்மணி வசந்த், யோகி பாபு, பி.எஸ். அவினாஷ், திவ்யா பிள்ளை, பிரித்விராஜ், ராஜ்குமார் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இந்தப் படத்துக்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைத்துள்ளார். சாம் சி.எஸ். பின்னணி இசையமைத்துள்ளார். 7சிஎஸ் என்டர்டெய்ன்மென்ட் நிறுவனம் தயாரித்து இருக்கிறது.ஒரு ரேஸ் சீனில், அடுத்து என்ன நடக்கும், என்ன நடக்கும் என்கிற எதிர்பார்ப்பு இருந்தது. படம் கடைசி வரையில் போர் அடிக்கவேவில்லை. படத்தில் விஜய் சேதுபதி, யோகி பாபு இருவரும் இருக்கிறார்கள். இவர்கள் தனித்தனியாக படத்தில் நடித்திருந்தாலே அந்த படத்தை அனைவரும் பார்போம். இந்த படத்தில் சேர்ந்து நடித்திருக்கிறார்கள் அது மிகவும் நன்றாக இருந்தது. யோகி பாபுவின் காமெடி அட்டகாசமாக ஒர்க் அவுட் ஆகி இருக்கு. அதேபோல ஆக்ஷன் சூப்பராக இருந்தது. அதை ஸ்கிரீனில் பார்க்கும்போது மிகவும் பிரம்மாண்டமாக தெரிகிறது.



பல புது முகங்கள் வந்தாலும் 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு முன்னணி நடிகையாக திகழ்ந்து வருபவர் நடிகை திரிஷா. துணை நடிகையாக ஆரம்பித்த இவர் விஜய் அஜித் சூர்யா கமல் ரஜினி என அனைத்து முன்னணி நடிகர்களுடனும் ஜோடி சேர்ந்து நடித்து மக்கள் மனதில் ஒரு நீங்கா இடம் பிடித்தார். தமிழ் மட்டுமல்ல தெலுங்கிலும் இவருக்கு ஆண், பெண் ரசிகர்கள் அதிகம். தற்போது மணிரத்தினம் இயக்கத்தில் தக் லைப் திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார். அந்த படத்தின் ப்ரோமோஷன் பணிகளில் ஈடுபட்டு வருகிறார் திரிஷா. அதற்காக பல ஊர்களுக்கு சென்று படத்தை புரமோட் செய்து வருகிறார். சமீபத்தில் கேரளா சென்ற திரிஷாவிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டது. அதில் மலையாளத்தில் எந்த நடிகருடன் நடிக்க ஆசைப்படுகிறீர்கள் என கேட்டதற்கு கொஞ்சம் கூட யோசிக்காமல் ஃபகத் பாசில் என கூறினார் திரிஷா.














கன்னிப்பருவத்திலே திரைப்படம் மூலம் அறிமுகமாகி, தமிழ்த் திரையுலகில் பிரபலமாக விளங்கிய நடிகர் ராஜேஷ் காலமானார். மாறுபட்ட, அழுத்தமான பாத்திரங்களில் நடித்ததன் மூலம் தமிழ்த் திரையுலகில் முத்திரை பதித்தவர் இவர். 45 வருடங்களாக 150 படங்களுக்கு மேல் நடித்துள்ளவர் டப்பிங் ஆர்டிஸ்ட் ஆகவும் எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் சமூக சிந்தனை உள்ளவராகவும் இருந்து வந்தவர். எனக்கு மட்டுமல்ல ராஜேஷ் சினிமா துறையில் நிறைய பேருக்கு நெருங்கிய நண்பர்.

அவர் ஒரு பெரிய ஹீரோவோ, குணசித்திர நடிகரோ, டைரக்டரோ, அரசியல்வாதியோ கிடையாது. இருந்தாலும் முதலமைச்சரிலிருந்து இளையராஜா தொடர்ந்து எல்லா பிரபலங்களும் வந்து அஞ்சலி செலுத்தியிருக்கிறாங்க. இது அவர் எப்படி வாழ்ந்தார் என்பதற்கு ஒரு சான்று. ஆடாதொடை இலை போன்று ராஜேஷ் வாழ்ந்துட்டு போயிருக்கிறார். அந்த செடியில் எல்லா பாகமும் மருத்துவ குணம் உள்ளது. அதேபோல ராஜேஷ் எல்லா விதத்திலும் பலருக்கும் நன்மையை கொடுத்து இருக்கிறார். என்று சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிகர் ராஜேஷ் உடலுக்கு அஞ்சலி செலுத்திய பிறகு தெரிவித்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டு இருக்கிறார்.

## தன்னைப்போல் பிறரை எண்ணும் தன்மை கொண்டவர் எம்.ஜி.ஆர்

### - ஆரூர்தாஸ் நெகிழ்ச்சி!



**த**மிழ் சினிமாவில் வசனத்தில் கொடிகட்டி பறந்தவர் ஆரூர்தாஸ். எம்.ஜி.ஆர் நடித்த நீதிக்கு பின் பாசம் படத்தின் போது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை அவர் பகிர்ந்து கொள்கிறார். நீதிக்குப்பின் பாசம்' படப்பிடிப்பு கடைசிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த நேரம்.

ஒருநாள், நான் என் காரில் மவுண்ட் ரோடுக்குப் போகும் வழியில் ஜெமினி ஸ்டூடியோ அருகில் (அப்பொழுது அண்ணா மேம்பாலம் கட்டப்படவில்லை) 'நீதிக்குப்பின் பாசம்' படத்திற்கு ஒரு பெரிய விளம்பர 'பேனர். அதில் என் பெயர் எழுதப்படவில்லை. அதைப்பார்த்து எனக்கு வருத்தமாக இருந்தது.

அது கம்பெனி வைத்த பேனர் என்று எண்ணி படப்பிடிப்பில் தேவரண்ணனிடம் கூறி குறைப்பட்டுக் கொண்டேன். அப்போது அருகில் எம்.ஜி.ஆர். இருந்தார்.மூன்று நாட்களுக்குப்பின்னர் எம்.ஜி.ஆர். என்னைக் கேட்டார்.

அவர்: 'என்ன முதலாளி? (சில சமயங்களில் தேவரண்ணனையும் என்னையும் சேர்த்து முதலாளி என்பார். அது அவருடைய மனோ நிலையைப் பொறுத்தது.) ஜெமினி பேனரை இப்போ பாத்திங்களா?'.

நான்: 'இல்லியே. ஏண்ணே?'

அவர்:ரு "இப்பவே ஒங்க காரை எடுத்துக்கிட்டுப்போயி ஒரு நிமிஷம் பாத்திட்டு வாங்க சொல்றேன் ரு போங்க'.



போய் பார்த்தேன். ஒரு 'பிளைவுட்' துண்டுப் பலகையில் 'கதைருவசனம்: ஆரூர்தாஸ்' என்று என் பெயர் பெரிதாக எழுதப்பட்டு அந்தப் பேனரில் தனியாகப் பொருத்தப்பட்டிருந்ததைப் பார்த்ததும் எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. திரும்பி வந்து எம்.ஜி.ஆரிடம் தெரிவித்தேன். இப்போ ஒங்களுக்கு ஏற்பட்ட இந்த உணர்வு ஒருகாலத்துல எனக்கும் உண்டாச்சு. நான் கோவை ஜூபிடர் பிக்சர்ஸ்ல மாசச்சம்பளத்துல படங்கள்ள நடிச்சிக்கிட்டு இருந்தப்போ ரு எனக்கு 'ஹீரோ அந்தஸ்து' கிடைக்கிறதுக்கு முந்தி ரு விளம்பரங்கள்ள எம்பேரைப் போடாம என்னைப் புறக்கணிப்பாங்க.

அப்போல்லாம் நான் மனசு வேதனைப்பட்டு 'நமக்கும் ஒரு காலம் வரும்'னு நினைச்சி ஆறுதல் அடைவேன்.

அந்தச் சமயத்துல ஜூபிடர் பிக்சர்ஸ்ல நிர்வாகியா இருந்த அவர் (எம்.ஜி.ஆர். குறிப்பிட்ட அந்தப் பெயரை இங்கு எழுத நான் விரும்பவில்லை. இப்பொழுது அவர் உயிரோடு இல்லை) என்னைக் கூப்பிட்டு, 'ராமச்சந்திரா! கேன்டின்லேருந்து டீ வாங்கிட்டு வான்'னு சொல்வாரு. வாங்கிட்டு வந்து கொடுப்பேன்.

பிற்காலத்துல பல வெற்றிப்படங்கள்ள நடிச்சி நான் ஹீரோ ஆகி, எனக்கு 'மார்க்கெட் மதிப்பு வந்ததுக்கப்புறம் அதே ஜூபிடர் நிர்வாகி எங்கிட்டே வந்து, 'எம்.ஜி.ஆர்! நான் கஷ்டத்துல இருக்கேன். எனக்கு ஒரு படம் பண்ணிக்குடுங்கன்னு கேட்டாரு. நானும் அதுக்கு மனப்பூர்வமா சம்மதிச்சி கால்ஷீட் கொடுத்து, பூஜை போட்டுத் தொடங்கி கொஞ்ச நாள் ஷூட்டிங் நடந்தப்புறம் அவரால மேற்கொண்டு படப்பிடிப்பைத் தொடர முடியாம அந்தப்படம் அப்படியே நின்னு போயிடுச்சி.சினிமா பற்றிய நாளிதழில் வெளியான தொடர் ஒன்றில் இதைக் குறிப்பிட்டு சொல்லுகிறார் ஆரூர்தாஸ்.

தன்னைப் போலவே பிறரை எண்ணும் தன்மை படைத்தவர் எம்ஜிஆர் என்பதை இதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

# கவலைக்கு இடம் தராதீர்கள்!



"இருப்பதைக் கொண்டு நிறைவாக வாழக் கற்றுக் கொள்" "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" "பொறுத்தார், பூமியாள்வார்" இப்படிப் பல பழமொழிகள்,நம் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் பொருந்துமாறு நம் முன்னோர்கள் சொல்லிச் சென்று இருக்கிறார்கள். இருந்தாலும் நம் மனம் ஏதோ ஒரு நினைவில் சிக்கிக் கொண்டு அதைப் பற்றியே கவலை கொள்கிறது. அதில் இருந்து மீள்வது இல்லை.

ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு விதமான கவலைகள் இருக்கிறது. ஏன் கவலை?நாம் நினைத்தது அல்லது எதிர்ப்பார்த்தது நடைபெறவில்லை என்றால், கவலை நம்மை ஆட்கொள்ளும். இந்த உலகில் கவலை இல்லாமல் மனிதர்கள் எங்கேயும் இருக்க முடியாது.. இருப்பவர், இல்லாதவர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் கவலைப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள். கவலைப்படும் போது அதைப்பற்றியே நினைத்துக் கொண்டே இருப்பார்கள்..

நிம்மதி இல்லாமல் தவிப்பார்கள்..என்ன செய்வது என்று தெரியாமல் படபடப்புடன் எப்போதும் காணப்படுவார்.. இந்த கவலைகள் என்பது ஒரு மனிதனுக்கு புற்றுநோயைப் போன்றது. புற்றுநோய் கிருமிகள் எப்படி உடலில் உள்ள மற்ற பாகங்களுக்கு விரைவாக பரவுகின்றதோ, அதைப் போன்று கவலை என்பது ஒரு கவலை போய் இன்னொரு கவலையை உண்டாக்கும் சக்தி கொண்டது.

கவலைகளை நம்முடைய மனத்துக்கு உள்ளேயே போட்டு அமுத்தி வைக்க, வைக்க அதன் அமுத்தம் பல மடங்கு மிகுதியாகி விடும்.

இதனால் மனச்சோர்வும், மனச்சோர்வினால் மேலும் கவலைகளும் ஏற்படலாம். எதற்கு, எது காரணம் என்கிற ஆராய்ச்சியை எல்லாம் விட்டு விட்டு அதில் இருந்து விலகி நின்று, வாழ்க்கைப் பிரச்சினைகளை எப்படி வெற்றிகரமாக சமாளிப்பது என்பதே முக்கியம்.எந்த ஒரு இக்கட்டான சூழலையும் நம்மால் சமாளிக்க முடியும். எதையும் தீர அலசி ஆராய்ந்தால் தீர்வு கிடைக்கும். வின்ஸ்டன் சர்ச்சில் அவர்கள் ஒருமுறை ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும் போது, கவலைப்படுவதற்கு எனக்கு நேரம் இல்லை என்றார். இதைக் கேட்டது ஒரு நிருபர். அந்த நிருபருக்கு ஒரே ஆச்சர்யம்.

என்னடா இது! கவலையில்லாத ஒரு மனிதனா? அல்லது கவலையைப் பற்றி நேரம் இல்லை என்று சொல்லும் ஒரு மனிதனா? என்று ஆச்சர்யம். வின்ஸ்டன் சர்ச்சில் அதற்குக் கூறிய விளக்கம், நான் ஒரு நாளைக்கு 18 மணி நேரம் வேலை செய்கிறேன். அதனால் எனக்கு கவலைப்படுவதற்கு நேரம் இல்லை என்று கூறினார். உண்மையிலேயே நல்ல பதில் மற்றும் உண்மை கூட. கவலைகளின் மூல காரணத்திற்கு நம்முடைய கற்பனையும் ஒரு காரணமாகும். செய்தித்தாள்களில் மற்றும் தொலைக்காட்சி செய்திகளில் விபத்து இல்லாத செய்தி என்பது அபூர்வமாகத் தான் இருக்கும்.

அது விமான விபத்தாக இருக்கலாம், பேருந்து விபத்தாக இருக்கலாம், அல்லது நடந்து செல்லும் போது வாகனம் மோதி இறந்த விபத்தாக இருக்கலாம்.

அதை நினைத்து நீங்கள் எங்குமே செல்லாமல் வீட்டுக்கு உள்ளேயே முடங்கிக் கிடக்க முடியுமா?


ஒரு இடத்திற்கு போக வேண்டும் என்றால் ஏதோ ஒரு வழியை உபயோகப்படுத்தித் தான் ஆக வேண்டும். நடந்து செல்ல வேண்டும் அல்லது ஏதாவது ஒரு வாகனத்தில் சென்று தான் ஆக வேண்டும்,

விபத்து நடக்கிறது என்று வீட்டுக்கு உள்ளேயே இருந்தால் என்ன நடக்கும்?கல் தடுக்கி விழுந்து பிழைத்தவனும் உண்டு, புல் தடுக்கி செத்தவனும் உண்டு, என்பது பல மொழி.

கவலைகளின் தொழிற்சாலையே ஒருவருடைய மனது தான். இங்கு தான் மனித இனத்திற்கு வேதனையைத் தரக்கூடிய கவலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தக் கவலைகளின் மூலப்பொருள் நினைவுகள். நினைவுகள் தான் ஒருவரின் கவலைக்கு முக்கியக் காரணம். நடந்து போனதை நினைத்துக் கவலை கொள்வதை விட்டு இனி நடக்கப் போவதை மட்டும் நினைவில் கொண்டு உற்சாகமாக செயல்படுங்கள்.

– தீ.கவின், பண்ருட்டி

# CASE HISTORY



## Senior Advocate M.P.Nathan

NON-REPAYMENT OF LOAN AMOUNT DOESN'T AMOUNT TO OFFENCE OF CHEATING."

-Supreme Court.

Mere inability to repay the loan amount does not rise to a criminal prosecution unless fraudulent and dishonest intention is shown at the beginning of the transaction.

Satishchandra Ratanlal Shah Vs. State of Gujarat.

NO FIR

AGAINST A ADVOCATE OR DOCTOR :

In an important decision Hon'ble Supreme Court of India said, that if the advise of a lawyer and Doctors goes wrong in some way, even than no case can be registered against him/her.

Though Supreme Court also said that Lawyer and Doctors should take care of the interests of his/her clients.(Justice P. Sathasivam and Justice Ranjan Gogoi bench) .

Court also said that in professions like lawyers and doctors, the professionals cannot guarantee for the success of the case. Courts said that the advocate cannot provide guarantee to his/her client that he would definitely win the case and nor doctor can tell his patient that is operations are always successful. And though this professions doctor and lawyer can only say that they are experienced in their work and they would do their best efforts so that they are successful.

CAUSE TITLE: THE ROYAL SUNDARAM ALLIANCE INSURANCE COMPANY LIMITED V. HONNAMMA & ORS.

The Supreme Court held that, in motor accident cases, the liability of a tractor and its insurer extends to the motor accident caused by the tractor through the trailer, which resulted in the death of a passenger. The Court dismissed an Appeal filed by The Royal Sundaram Alliance Insurance Company Limited (Appellant), thereby upholding the enhanced compensation awarded by the Karnataka High Court to the legal heirs (Respondents) of the deceased, who died in a motor vehicle accident. A Bench of Justice Sudhanshu Dhulia and Justice Ahsanuddin Amanullah held, “Thus, the liability of the tractor/its insurer extended to the accident caused by the tractor resulting in the death of the deceased, through the trailer. This being the position in the present case, the principles emanating from the decisions where the Courts have held that the trailer has to be separately registered with the insurance company to make it liable, would not be applicable. To that extent, the facts in the present case are clearly distinguishable from the ones cited by learned counsel for the appellant. The legislation i.e., the MV Act, being beneficial and welfare-oriented in nature.”

"பூவா தலையா போட்டால் தெரியும் நீயா நானா பார்த்து விடு"

உற்சாகமாக பாடிக் கொண்டே உள்ளே வந்தார் கபாலிகான்!

ஒரு தட்டில் காராசேவு முறுக்கு மைசூர் பாகு வைத்து நீட்டினோம்.

சாப்பிட்டுக் கொண்டே செய்திகளை சொல்ல ஆரம்பித்தார்.


சட்டமன்றத் தேர்தலுக்காக தங்களை தயார்படுத்திக் கொள்வதில் ஆளுங்கட்சிக்கும் எதிர்கட்சிக்கும் இடையே தொடர்ந்து சவால்கள் வந்த வண்ணம் உள்ளன.

**ஓஹோ!**

குறிப்பாக திமுகவிற்கு எதிராக கட்டமைக்கின்ற வேலையை மத்தியில ஆளுகின்ற பா.ஜ.க.வுடன் அதிமுக இணைந்த பிறகு விறுவிறுவென வேலைகள் ஆரம்பித்து விட்டன.

**எப்படி?**

மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை கூட்டிய எடப்பாடி பழனிசாமி கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துச் சொல்லி




இம்முறை நம்மிடம் மாநிலத்தில் நாம் இல்லாவிட்டாலும் மத்தியில் ஆளும் பா.ஜ.க நமது கூட்டணியில் இருப்பதால் , திமுக அரசு கொடுக்கும் நெருக்கடிகளை, தொல்லைகளை சமாளித்து விடலாம். எனவே களத்தில் இறங்கி வேலை செய்யுங்கள் "என்று சொல்லி அனுப்பி இருக்கிறார்.

இதற்கு முன்பு ஒருங்கிணைந்த அ.தி.மு.க மட்டுமே வெற்றிக்கு சாத்தியம் என்று தங்களிடம் தொடர்ந்து வற்புறுத்தி சொல்லி வந்த பாஜக, தற்போது "அ.தி.மு.க உட்கட்சி விவகாரங்களில் பா.ஜ.க தலையிடாது" என்று அமித்ஷா அறிவித்து விட்டு போனார். இதனால் இந்த தேர்தலில் ஓ.பி.எஸ் ,டி.டி.வி தினகரன் சசிகலா ஆகியோர் எதிர்ப்பு அ.தி.மு.கவில் பெரிய சலசலப்பை ஏற்படுத்தாது என்று எடப்பாடி நம்புகிறார்.

டி.டி.வி.தினகரன் 12.04.2025 அன்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், “அதிமுக தலைமையை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறார்களா?” என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த அவர், “உள்துறை





அமைச்சர் அமித்ஷா இந்த கேள்விகளுக்கு எல்லாம் பதிலளித்திருக்கிறார். நாங்கள் எல்லாம் தமிழ்நாட்டின் தீய சக்தி திமுகவை வீழ்த்துவதற்காக எம்ஜிஆர், ஜெயலலிதா வழியில் வந்தவர்கள். அவர்களின் கொள்கைகளை தங்கி செல்பவர்கள். தீயசக்தி திமுகவை வீழ்த்த வேண்டும் என்பதற்காகவும் இந்தியாவின் பிரதமர் மோடியின் கரத்தை வலுபடுத்துவதற்காகவும் அவருடைய அணியில் இருக்கிறோம்.

மோடி அணியில் நாங்கள் இருக்கிறோம். அதனால் திமுகவை வீழ்த்த வேண்டும் என்கிற ஒரு குறிக்கோளோடு செயல்படுகிறோம் என்று பேட்டி அளித்தார்.

அடுத்த நான்கு நாட்களில் அமமுக பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரனுக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அதில், “அதிமுகவின் கொடி, முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பெயர், புகைப்படம் ஆகியவற்றை பயன்படுத்த தடைவிதிக்க வேண்டும் என தெரிவித்திருந்தார். இந்நிலையில் இந்த வழக்கை எடப்பாடி பழனிசாமி திரும்ப பெற்றுள்ளார்.

எனவே ஓபிஎஸ் தினகரன் சசிகலா இல்லாததால் முக்குலத்தோர் வாக்குகள் அ.தி.மு.கவுக்கு வராமல் போய்விட்டது என்ற பேச்சு இந்த தேர்தலில் எடுபடாது என்பதற்கு இது உதாரணமாக அமைந்திருக்கிறது. அடுத்த கூட்டணி விஷயத்தில் உட்கட்சி முதலில் உச்சகட்டத்தில் இருந்து வரும் பா.ம.கவில் அன்புமணி ராமதாஸ் பா.ஜ.க கூட்டணியில் தொடர்வார். ராஜ்ய சபா சீட்டு விஷயமாக தே.மு.தி.கவுடன் இருந்து வந்த முரண்பாட்டுக்கு கே.பி.முனுசாமி மூலமாக 2026 இல் தருகிறோம் என்று சொல்ல வைத்து விட்டார்.

**அவர்கள் ஒத்துக் கொண்டார்களா?**

இல்லை. நன்றி மட்டும் சொல்லிவிட்டு ஜனவரி



மாதம் சொல்கிறோம் என்று சொல்லிவிட்டார்கள்.

**அப்படியா?**

ஆமாம். அவர்களை எப்படியும் தங்கள் கூட்டணிக்குள் சேர்த்து விட முடியும் என்று பா.ஜ.க இருக்கும் நம்பிக்கையில் இருக்கிறார் எடப்பாடி.

**அப்ப தி.மு.க.வுக்கு சவால்கள் அதிகமாக இருக்கிறதோ?**

அதைப் பற்றி எல்லாம் முதல்வரோ, திமுகவினரோ கவலைப்பட்டதாக தெரியவில்லை. நீட் எதிர்ப்பு , வக்பு வாரிய சட்ட எதிர்ப்பு, நிதி வழங்காத மத்திய அரசு என்று வழக்கம்போல மத்திய அரசை எதிர்ப்பதன் மூலம் பா.ஜ.க.வையும் அதிமுகவையும் எளிதில் எதிர் கொண்டு விடலாம் என்று நம்புகிறார்கள்.

குறிப்பாக மதுரையில் நடந்த பொதுக்குழுவுக்கு பிறகு உற்சாகத்தில் இருக்கிறார்கள் தி.மு.கவினர்.

அவர்களுக்கு இப்போதுள்ள சவால் த.வெ.க.விஜய் மட்டுமே. அதை எப்படி சமாளிப்பது என்று தான் யோசித்து அதற்கேற்றார் போல் திட்டம் தீட்டி நடைபெறுகிறது. பார்ப்போம் இன்னும் தொடர்ந்து தேர்தல் நெருங்க நெருங்க அரசியல் கட்சிகள் நடத்தும் காட்சிகளை பார்க்கலாம் பார்க்கலாம் வரட்டுமா என்று சொல்லிக் கொண்டு வெளியேறினார் கபாலிகான்.




# ஆர்வம் இருந்தால் திறமை வளரும்

தனக்கானத் துறையைத் தேர்ந்தெடுப்பதில் ஒருவரின் ஆர்வம் தான் அடிப்படை. ஆனால், ஆர்வம் இருக்கிறது என்பதாலேயே திறமை வந்து விடாது.

எனவே திறமையில் சறுக்கல்கள் வரும் போது ஆர்வத்துக்குச் சற்றே அணை போட்டு விட வேண்டும்.

திறமை எதில் இருக்கிறதோ, அதில் ஏற்கனவே இருக்கக் கூடிய சிறிதளவு ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு அதைப் முதன்மைத் துறையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆர்வம் அதிகமாக உள்ளதை இழந்து விடாமல், பொழுதுபோக்காகவோ இரண்டாவது துறையாகவோ வைத்துக் கொள்ளலாம்.

ஆர்வம் மாறிக் கொண்டே இருக்கும். ஆனால் திறமை அப்படி அல்ல. தவிர, திறமையைத் தொடர்ந்துப் பட்டை தீட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

எனவே அதற்கு அதிக முயற்சி தேவைப்படும். எனவே தங்களது திறமையைக் கண்டு கொண்டு, அதில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு சிறப்பாக வருவதே சிறந்த வழியாக இருக்க முடியும்.

ஒரு சிங்கம் ஒன்று ஒரு காட்டைத் தன் கட்டுப்பாட்டில் வைத்து இருந்தது.. அதற்கு ஒரு ஆசை. தன் காட்டில் வாழ்கின்ற மிருகங்களில் எதற்கு அதிக திறமை இருக்கிறது என்று சோதிக்கப் பார்க்க விரும்பியது..

அன்று மாலை காட்டில் உள்ள எல்லா மிருகங்களை அழைத்துத் தான் நடத்தப் போகும் சோதனையை விளக்கி, நாளைக் காலையில் எல்லா மிருகங்களும் என் கூட்டுக்கு வர வேண்டும் என்று சொல்லியது.

அன்றிரவு மிருகங்கள் யார் அந்தத் திறமைசாலி என்று குழம்பிக் கொண்டே உறங்கச் சென்றது.. காலையில் சிங்கம் நம் திறமையை எப்படி சோதனை செய்யப் போகிறதோ? என்ற கவலையில் எல்லா மிருகங்களும் சிங்கத்தின் இருப்பிடத்துக்கு வந்தன.கூண்டில்

இருந்து வெளியே வந்த சிங்கம் அங்கு கூடி இருந்த மிருகங்களைபு பார்த்து,

"அதோ தொலைவில் தெரிகிறதே, அந்தப் பனைமரத்தின் உச்சிக்கு யார் முதலில் சென்று வருகிறீர்களோ, அவரே சிறந்த திறமைசாலி என்றது.

திகைத்துப் போன மிருகங்கள் மரத்தை நோக்கி ஓடிச் சென்றது. அதில் ஏறத் தொடங்கின. முதலில் மரத்தின் உச்சியை அணில் தொட்டது.

மற்ற எவற்றாலும் பாதி உயரம் கூட ஏற முடியவில்லை. வெற்றி பெற்ற அணிலோடு காட்டின் தலைவனான தான் போட்டி இடப் போவதாக அறிவித்தது சிங்கம்..

ஆனால் அந்த சிங்கத்தால் மரத்தில் ஏற முடியாமல் தோல்வியைத் தழுவியது.

குழம்பிப் போன சிங்கம் ஒவ்வொரு மிருகத்திடமும் அதனதன் திறமையைக் கேட்டு அறிந்தது. சிறுத்தை நன்றாக ஓடுவேன் என்றது. குரங்கு மரம் விட்டு மரம் தாவுவேன் என்றது. யானை நான் அதிக எடையை சுமப்பேன் என்றது. இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு திறமை உண்டு என்பதை அறிந்துக் கொண்டது சிங்கம். திறமையை சோதிக்க அனைவருக்கும் ஒரே மாதிரி போட்டி வைத்த தனது மடமையை எண்ணி வருந்திய சிங்கம்,பின்னர் தெளிவு அடைந்தது..

ஆர்வத்துக்கு முதலிடம் தர வேண்டும் என்று தான் தொழில் ஆலோசகர்கள் சொல்கிறார்கள்.

எதில் ஆர்வம் இருக்கிறதோ அதில் திறமையை வளர்த்துக் கொள்வது தான் சிறந்தது..

ஆர்வம் ஆழமாக இருந்தால் திறமையை வளர்த்துக் கொள்வதற்கான ஊக்கத்தையும் அந்த ஆர்வமே தந்து விடும்..

# மகிழ்ச்சியாக இருந்தாலே மன அழுத்தம் குறையும்!


இப்போதெல்லாம் பெரும்பாலானோர் சின்னச் சின்ன விஷயங்களுக்கும் பதற்றமாகி மூலையில் அமர்ந்து அதிகமாகச் சிந்திக்கத் தொடங்கி விடுகிறார்கள்.

சிலர் தங்கள் எதிர்காலம், பணி, பொருளாதாரம் என நினைத்து மன அழுத்தத்தில் சிக்கிக் கொள்கிறார்கள்.

அதிகமாக யோசிக்காதீர்கள்:

உங்கள் பதற்றத்திற்கு பின்னால் ஒளிந்திருக்கும் காரணத்தை கண்டுபிடிக்க யோசித்தால், கண்டிப்பாக ஏதாவது ஒரு காரணம் உங்கள் நினைவுக்கு வரும். வேலை செய்பவர்களுக்கு வேலையை நினைத்து பதற்றம். பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளின் படிப்பை நினைத்து கவலை.

மேல் படிப்பு படிப்பவர்களுக்கு எதிர்காலத்தில் பெரிய அளவில் சாதிக்க வேண்டும் என்ற சிந்தனை. இப்படி ஏகப்பட்ட விஷயங்களை சொல்லலாம். எனவே எந்த விஷயத்திற்கும் பதற்றம் அடையாமல் இருக்க முயற்சி செய்யுங்கள். இது உங்கள் மன அழுத்தத்தை குறைக்கும்.



எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பது சற்று கடினம் தான். ஆனால், அது முடியாத காரியம்

ஒன்றும் இல்லை. உங்கள் சுற்றுப்புறத்தை அமைதியாகவும் சாந்தமாகவும் வைத்திருக்க முயற்சி செய்யுங்கள். மகிழ்ச்சியாக இருப்பது பல பிரச்சனைகளைச் சரிசெய்யும்.


சண்டை போடும் போது மன அழுத்தம் அதிகமாகிறது. அதனால் சண்டை வருவதற்கான ஒவ்வொரு காரணத்தையும் தவிர்க்க முயற்சி செய்யுங்கள். ஒருவேளை சண்டை வந்துவிட்டால், அந்த நேரத்திலும் நிதானமாக சிந்தித்து செயல்பட முயற்சி செய்யுங்கள். பலரும் காலையில் எழுந்த உடனே முதலில் உடற்பயிற்சி செய்ய விரும்புகிறார்கள். இதற்கு பின்னால் இருக்கும் காரணம் மன அழுத்தத்தை விரட்டுவது தான்.

ஹோவர்ட் பல்கலைக்கழகம் உட்பட பல ஆராய்ச்சிகளில், தினமும் சிறிது நேரம் உடற்பயிற்சி செய்வதன் மூலம் நம் உடலையும் மனதையும் முற்றிலும் அமைதியாக வைத்திருக்க முடியும் என்பது தெரிய வந்துள்ளது.

சில நேரங்களில் நாம் சில வேலைகளை செய்த பிறகு நன்றாக உணர்வோம். அத்தகைய சூழ்நிலையில், மனதை நன்கு உணர வைக்கும் வேலைகளை நீங்கள் அடிக்கடி செய்யுங்கள். விருப்பமுள்ள பாடல்களைக் கேளுங்கள் என மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கும் செயல்களில் ஈடுபடுங்கள்.

அடுத்து என்ன நடக்கும் என்பதைப் பற்றிச் சிந்திப்பதை நிறுத்திவிட்டு நிகழ்காலத்தில் நடப்பதை ரசித்து அனுபவித்து வாழத் தொடங்குங்கள். இதுவே மன அழுத்தத்தைக் குறைக்கும் மிகச் சிறந்த வழி.

# சிறிய தொண்டையும் இறைவன் ஏற்றுக் கொள்வார்!



ஒரு கிராமத்தில் கோயில் கட்டும் பணி நடைபெற்றது. அதில் சிற்பிகள், கட்டிடக் கலை வல்லுனர்கள், கொத்தனார்கள், கல்லுடைப்போர் எனப் பலர் அற்புதமாய் பணிபுரிந்தனர்.

வீட்டிற்கு ஒருவர் என அக்கோவிலுக்கு தங்களால் முடிந்த உதவிகளைச் செய்தனர் ஊர் மக்கள். அவ்வூரில் வயதான பாட்டி இருந்தாள். அவளுக்கு அக்கோவில் கட்டுவதில் எவ்விதக் கடினப் பணியையும் செய்கின்ற ஆற்றலில்லை. ஆனால் இறைவனுக்கு ஏதேனும் ஒரு வகையில் தொண்டு செய்ய வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்து இருந்தது.

அதனால் ஏதாவது ஒரு உதவி இக்கோவிலுக்குச் செய்ய வேண்டுமென நினைத்தாள். ஒரு வாளியில் மோர் கொண்டு வந்து வெயிலில் கோவில் வேலை செய்பவர்களுக்குத் தந்தாள். கடும் வெயிலில் அந்த மோர் அங்கு பணிபுரிவோரின் தாகத்தைத் தணித்ததோடு அனைவரின் மனதையும் குளிர்வித்தது. தினமும் இப்பணி தொடர்ந்தது.

கோவிலின் கட்டுமானப் பணி நிறைவுற்றது. கோபுரத்தின் மேற்கூரையில் ஒரே ஒரு பலகைக் கல்லை வைத்தால் கோபுரப் பணி முடிந்துவிடும் என்ற நிலையில் எத்தனையோ கற்களை வைத்தாலும் அவை கச்சிதமாக இல்லை. சில கற்கள் அளவு சிறியதாகவும், சில கற்கள் பெரியதாகவும் இருந்தன. பெரிய கற்களைச் சரி செய்தால் அவை இரண்டாய் உடைந்து போனது.

அவ்வளவு பெரிய கோவிலைக் கட்டிய சிற்பிக்கு மேற் கூரையில் வைக்க ஒரே ஒரு கல் மட்டும் சரியாய் அமையவில்லை. ஒரு வாரம் செய்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இறைனை வேண்டி நின்றான். அவன் கனவில் இறைவன் தோன்றி தனது தலைக்கு மேல் நிழல் தரும் கல் இருக்குமிடம் கூற அதிகாலையில் சிற்பி அக்கல்லை எடுக்கும்போதுதான் தெரிந்தது அது அக்கிழவியின் வாசல்படியில் உள்ள கல் என்பது.

அதை எடுத்து கோபுரத்தின் மேற்கூரையில் வைக்க கச்சிதமாய் இருந்தது. இச்செய்தி கேட்டு ஓடோடி வந்தாள் கிழவி.

இறைவனை வணங்கி, இறைவா எனது காலடிபட்ட கல்லா உனது தலைமேல் இருப்பது என்று மனமுருகினாள். இறைவனின் அசரீரி சொன்னது,'அம்மையே உனது காலடிபட்ட கல்லின் நிழலில் வாழ்வதை யாம் பெருமையாக நினைக்கிறோம்.

தள்ளாத வயதிலும் தணியாத ஆர்வத்தோடு பிரதிபலன் பாராது எனக்காகப் பணி செய்தோரின் தாகம் தீர்த்தாய். உமது காலடி பட்ட கல்தான் புண்ணியமான கல். அப்புண்ணிய பலகைக் கல்லின் நிழலில் வாழ்வதைவிட என்ன சுகம் எமக்குக் கிடைத்துவிடும்' என்ற அசரீரி முடிய ஆனந்தக் கண்ணீரில் உடல் நனைந்து உள்ளம் உருகி நின்றாள் கிழவி.

யார் ஒருத்தர் பிரதிபலன் பார்க்காம தொண்டு இறைவனுக்குச் செய்றாங்களோ, அவங்க செய்ற தொண்டு இறைவனுக்குச் செய்றதுக்குச் சமம். இந்தக் கதையில், 'கடவுள்,தொண்டு செய்றவங்க நிழலில்தான் இருப்பார்' என்பது புரியுது.

# உடல் பாதுகாப்பே உயிர் பாதுகாப்பு!

எங்கே ஆரோக்கியமான உடல் இருக்கிறதோ, அங்கே ஆரோக்கியமான எண்ணங்கள் இருக்கும். எனவே ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் நல்ல சிந்தனைகள் தோன்ற வேண்டுமென்றால் அந்த மனிதரிடம் நல்ல உடல் இருக்க வேண்டும்.

அந்த நல்ல உடலைத் தருவது உடற்பயிற்சி. அத்தகைய உடற்பயிற்சியோடு ஒரு விளையாட்டும் மனிதனுடைய வாழ்க்கையில் அங்கமாகிவிட்டால் அவர் வாழ்நாள் முழுவதும் இளமையோடு ஆனந்தமாய் இருப்பார்.

தமிழில் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று நாம் சொல்வது போல.

'ஒரு மனிதனின் மிகப்பெரிய சொத்து அவனது ஆரோக்கியமே'என்று ஆங்கில தத்துவ மேதை எமர்சன் சொல்கிறார்.

நாமெல்லாம் நமது சொந்தங்களை நிறைய இடங்களில் சந்திக்கின்றோம். திருமண நிகழ்வுகளில், வரவேற்பு நிகழ்வுகளில், வீட்டு விசேஷங்களில் சந்தித்தாலும் ஆற அமர பேசி ஒருவரை உற்சாகப்படுத்துகிற ஒரே இடம் மருத்துவமனைதான். மற்ற விழாக்களில் எல்லாம் தலையைக் காட்டிவிட்டு ஓடிவிடுகிறோம்.

ஆனால் மருத்துவமனைக்குச் சென்றுவிட்டு அப்படி வர முடியாது. ஒரு நோயாளியைச் சந்தித்துவிட்டு வருவதற்கு குறைந்தது ஒரு மணி நேரம் ஆகும். பார்க்கச் செல்கின்றவருக்கே இந்நிலை என்றால் நோய்வாய்ப்பட்டவர் கதி.

நோயின் தீவிரம் அதிகமாக இருந்தால் ஒரு வாரத்திற்குக் கூட இப்படி தினசரி நேரத்தைச் செலவழிக்க வேண்டியிருக்கும்.

அதற்குப் பதில் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்தை மட்டும் செலவழித்தால் ஆண்டு முழுவதும் புத்துணர்ச்சியுடன் உற்சாகத்தில் இருக்கலாம்.



உள்ளம் சொல்லும்படி கேட்கும் உடல் கேட்டேன்'.

'உடலினை உறுதிசெய்'

என்ற வரிகள் ஒவ்வொரு இளைஞனுக்காகவும் மகாகவி பாரதி எழுதிய வரிகள்.

உடம்புதான் ஒரு மனிதனுக்கு ஆற்றலும், சக்தியும் தருகிறது. அந்த நல்ல உடலை பேணிக்காக்க முடியும். இதைத்தான்

- திருமூலர்

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்'

# யாரையும் எளிதாக எடை போடாதீர்கள்!



வாழ்க்கை கற்றுக் கொடுக்கும் மிகச் சிறந்த மாற்றம்.

சரியாய் பேசுகிறோமா என்பதை விட சரியானவர்களிடம் பேசுகிறோமா என்பது தான் முக்கியம். ஏனென்றால் திருப்பித் தாக்கினார்கள் என்றால் இதயத்தில் காயம் மிக பலமாக இருக்கும்.

தானாக வரும் பிரச்சனைகள் குறைவு தான். தாமாகத் தேடிக்கொள்ளும் பிரச்சனைகளே அதிகம்.

பெருமளவு இழந்த பின்புதான் நம் முட்டாள்தனம் நமக்குத் தெரிகிறது. எதுவுமே தேவை இல்லை" என்று இருந்தவர்கள் 'நீயே போதும்' என மாறுவதும்,

"நீயே போதும்" என்று இருந்தவர்கள் 'எதுவுமே தேவை இல்லை' என மாறுவதுமே வாழ்க்கை கற்றுக் கொடுக்கும் ஆகச் சிறந்த (ஏ)மாற்றம். கடற்கரைக்கு வரும் அலைகள் தொடர்ந்துப் போராடிக் கொண்டே தானே இருக்கின்றது. தன் கரையை கடப்பதும் இல்லை,கடந்தால் விட்டு வைப்பதும் இல்லை.



உனக்கு ஏற்படும் தோல்விகளோடு, தொடர்ந்துப் போராடிக் கொண்டே இரு.. தோல்விகள் தோற்கட்டும் உன்னிடம்..

முயற்சிகளோடு நீ செயல்படு. வெற்றி நிச்சயம்!

உதவும் கரங்கள் பிரார்த்திக்கும் உதடுகளை விட சிறந்தது.

பணம் நிம்மதிக்கு நிகரானதல்ல. நிம்மதி பணத்திற்கும் மேலானது. காரணங்களைத் தேடுபவர். தவறை திருத்திக் கொள்ளப் போவதில்லை.

நேரம் என்பது ஒரு சிறந்த எழுத்தாளர். அது எப்போதும் சரியான முடிவை எழுதுகிறது.

நேரம் ஒருவரை உருவாக்குகிறது, சோதிக்கிறது, தலைக்குனிவைத் தருகிறது ஆனால், தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு அனுபவம் எனும் வெகுமதியை அளிக்கிறது.

யாரையும் இழிவாக நினைக்காதீர்கள். காலம் எப்படி வேண்டுமானாலும் மாறும். புறக்கணிக்கப்பட்ட பலர் தான் இந்த உலகத்தையே உலுக்கிப் பார்த்தவர்கள்.

நீங்கள் வேண்டாமென்று தவிர்த்தவர்கள், நீங்கள் வேண்டுமென்று தவிப்பார்கள் காத்திருங்கள்.

காலம் கட்டாயம் பதில் சொல்லும்.

# அந்த நாள் மீண்டு வருமா? மீண்டும் வருமா?

கடைக்கு வந்து சாமான் வாங்கும் குழந்தைகள் கையில் பொட்டுக்கடலையோ, ஆரஞ்சு முட்டாயோ தரும் கடைக்காரர்கள்! அதிகாலையில 'உப்ப்ப்பேய்ய்ய்' என்று கூவிக் கொண்டு தெருவில் வரும் உப்பு வண்டிகள்!

பசுமை மாறாத கீரைகளைக் கூடையில் சுமந்து வந்து சில்லரைக் காசில்லாத பெண்களிடம் ஆழாக்கு அரிசியை வாங்கிக்கொண்டு பண்டமாற்று முறையில் கீரை கொடுத்தவர்கள்!

அம்மிக்கல்லு கொத்தலியோ? ஆட்டாங்கல்லு கொத்தலியோ? என்றுக் கூவிக் கொண்டு (முந்தானைத் தொட்டிலில் பால்குடித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளோட) வீதியில் வரும் பெண்கள்!

மூங்கிலின் உச்சியில் சலங்கை கட்டிக்கொண்டு ஆடும் பொம்மையுடன் தெருவில் வரும் பம்பாய் மிட்டாய்! ஒரு கடிகாரம் வாங்கினால் கொசுறாக ஒரு துண்டு மிட்டாய் கன்னத்தில் ஒட்டப்படும். பசித்தால் யார்வீட்டில் வேண்டுமானாலும் சாப்பிடும் கள்ளமில்லாக் குழந்தைகள்!

எல்லாப் பட்டுப்புடவைக்கும் வெள்ளை ஜாக்கெட்டோடு திருப்தியடைந்த பெண்கள்( இப்போது ஜன்னல், கதவு, கண்ணாடி முத்தெல்லாம் வைத்து தையல் கூலியே10000)

விசேஷம் என்றால் இரண்டு நாட்கள் முன்னதாகவே வரும் உறவுக்காரர்கள்! (வருகின்ற பெண்கள் தூக்கி சொருகிக் கொண்டு சமைத்த அழகு)

பண்டிகைக் காலங்களில் உரிமையோட முருக்குப்பிடி, ஜல்லிக் கரண்டி ஓடி வாங்க வரும் வாண்டுகள்!

வயதானவர்களோ, கைக்குழந்தையோடு வரும் பிச்சைக்கார்ரகளுக்கு வாசலில் உட்கார வைத்து சோறுபோட்ட தாய்மார்கள்!

கல்யாண வீட்டில் பந்தல் போடுவதில் தொடங்கி 500 பேருக்குப் பரிமாறி (சரக்கு அடிக்காமல்) கடைசியாக மண்டபம் காலி செய்யும் வரையில் உடனிருந்து வேலை செய்யும் நண்பர்களும் உறவுகளும்!

வீடு மாற்ற வேண்டுமானால் வாடகை வண்டி மட்டுமே! சாமான் ஏற்றி இறக்கும் அத்தனை வேலைகளையும குதூகலமாகச் செய்த நண்பர்கள்!

புதுப்படம் ரிலீசானால் சைக்கிள் டிக்கட் நிச்சயம் கிடைக்கும் என்பதற்காகவே இரவு முழுவதும் சைக்கிளோட வரிசையில் நின்ற இளைஞர்கள்!

தெருவுல வரும் தோளில் கம்பளமும், உருமாலையும் கட்டி வரும் வளையல் காரர்களிடம் கை நிறைய




கண்ணாடி வளையல்கள் வாங்கிப் போட்டுக் கொண்டு காசு கொடுக்கையில் 'மலாரத்திற்கு' குங்குமம் வைத்து தொட்டுக் கும்பிட்ட பெண்கள்!

அந்த 3 நாட்களில் உலக்கையை குறுக்கே போட்டு அதற்கு உள்ளே உட்கார்ந்து கொண்டு பிள்ளைகளோட தாயம் விளையாண்ட கன்னியர்! விடுமுறை நாட்களில் குழந்தைகளெல்லாம் சேர்ந்து 'மரப்பாச்சி பொம்மைகளுக்குக் கல்யாணம்!' பண்ணிவெச்சு கூட்டாஞ்சோறு ஆக்கி சாப்பிட்ட விருந்து!

மோட்டார் போடாமல் கிணற்றில். தண்ணீர் சேந்தி குடத்தில் சுமந்து வந்து அண்டாவில் கொட்டின உடல் உழைப்பு! திருவிழாவென்றால் எல்லா ஆண்களும் வட்டமாக கைகோர்த்து நடுவில். பெண்களையும் குழந்தைகளையும் நடக்கவிட்டு பத்திரமாக அழைத்துச் சென்ற பாங்கு!

திறந்த வெளியில் கோவணம் கட்டிக் கொண்டு குளித்த கணவனுக்கு முதுகு தேய்த்துவிட்ட மனைவிகள் !

மதிய வேளைகளில் பக்கத்துவூட்டு அக்காவுக்கு தலையில் பேன் பார்த்தபடி கதை பேசி இறைப்பாறிய சகோதரிகள்!

பள்ளி விடுமுறை விட்டால் ஒரு வாரம் பத்து நாட்கள் என்று அத்தை மாமா வீடனுல் போய் உரிமையோடு தங்கி விளையாடி கிடைத்ததை உண்டு பாயில் உருண்டு கதைபேசி களித்த நாட்கள்!

இழவு வீட்டில் பத்து நாட்களுக்கு அடுப்புப் பற்ற வைக்க அனுமதிக்காமல் முறைபோட்டுக்கொண்டு வேளைக்கொரு வீட்டில் சமைத்துக் கொண்டுவந்து வீட்டில் பரிமாறின நட்பும் உறவும்!!

# குலதெய்வ கோவிலில் பொங்கல்

குலதெய்வ கோவிலில் வருடா வருடம் பொங்கல் வைத்து விசேஷமாக வழிபாடு செய்து கொண்டாடி வருவதால், குடும்பம் செழிக்கும் என்பது நம் பாரம்பரிய நம்பிக்கையாக இருந்து வருகிறது. குலதெய்வ கோவிலுக்கு செல்ல முடியாதவர்கள், வீட்டிலேயே குலதெய்வம் வழிபாடு செய்து வழிபட வேண்டும் என்பது நியதி. குலதெய்வ வழிபாட்டை நிறுத்தினால், குடும்பத்தில் நிறைய பிரச்சனைகள் வரும். நம் குலம் தழைக்க, செழிப்பாக இருக்க குலதெய்வ வழிபாட்டை தவறாமல் மேற்கொண்டு வருகிறோம்.

இப்படி குலதெய்வ கோவிலில் வழிபாடு செய்யும் பொழுது சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் படைத்து, பூஜை செய்ய வேண்டும் என்ற பழக்கம் புழக்கத்தில் உள்ளது. ஏன் சர்க்கரை பொங்கலை நைவேத்தியம் படைக்கிறோம்? வேறு ஏதாவது கூட படைக்கலாமே? குறிப்பாக சர்க்கரை பொங்கல், குலதெய்வத்திற்கு படைப்பது ஏன்? என்னும் ஆன்மீகம் சார்ந்த தெய்வீக ரகசியத்தை தெரிந்து கொள்ள தொடர்ந்து இந்த பதிவை நோக்கி பயணியுங்கள்.

நம் ஒவ்வொருவரின் ஜனன ஜாதகத்தின் படி, 12 ராசிகள் அமைய பெற்றுள்ளன. ஒவ்வொரு ராசிகளும், ஒவ்வொரு விதமான பலன்களை கொடுக்கக்கூடியது. 12 கட்டங்களில் ஐந்தாவது இடத்தில் இருக்கக்கூடியது பூர்வ புண்ணிய கர்ம பலன்கள். இந்த ஐந்தாம் இடம் ரொம்பவும் முக்கியமானது. புத்திர பாக்கியம், அறிவுத்திறன், கல்வித்திறன் என்று நம் வாழ்க்கையில் முக்கியமான விஷயங்களை தீர்மானிப்பது இந்த ஐந்தாம் இடம் தான்.

இந்த ஐந்தாம் இடத்தில் தீர்க்கமாக சம்மணம் போட்டு உள்ளவர் சனி பகவான். அதே இடத்தில் தான் குலதெய்வம் இருக்கிறது. ஐந்தாம் எண்ணுக்கு உரிய சனி பகவான் நியாயத்திற்கும், நேர்மைக்கும் கட்டுப்பட்டவர். இந்த உலகில் யாரை வேண்டுமானாலும், நீங்கள் ஏமாற்றி விடலாம் ஆனால் சனி பகவானை ஒருபோதும் ஏமாற்ற முடியாது. செய்த பாவத்திற்கும், புண்ணியத்திற்கும் உண்டான பலன்களை அவர் சரியாக கணக்குப் போட்டு கொடுத்து விடுகிறார்.

அப்படிப்பட்ட சனி பகவானுக்கு உரிய ஐந்தாம் இடத்தில் பூர்வ புண்ணிய பலன்கள் அமைய பெற்றுள்ளதால், நம் கர்ம பலன்களால் உண்டாகக்கூடிய பிரச்சனைகளில் இருந்து நம்மை விடுவிக்க குலதெய்வ அருள் தேவை. குலதெய்வ அருள் இல்லை என்றால், பல துன்பங்கள் நம்மை துரத்திக் கொண்டே இருக்கும். எந்த தெய்வத்தை நிந்தித்தாலும், குலதெய்வத்தை நிந்திக்க கூடாது. நம் நலன் மீது முழு அக்கறையும், பாதுகாப்பும் கொண்டுள்ள குல தெய்வத்தை வழிபட மறக்க கூடாது. அறுசுவைகளில் ஒவ்வொரு கிரகத்துக்கும் உரிய சுவை ஒன்று உண்டு. அந்த வகையில் சனிபகவானுக்கு உரிய சுவை கசப்பு.

கசப்பு என்னும் இந்த சுவையை, அதற்கு எதிராக இருக்கக்கூடிய இனிப்பு என்னும் சுவையை கொண்டு தான் கையாள வேண்டும். அதனால் தான் குலதெய்வத்திற்கு இனிப்பான சர்க்கரை பொங்கலை தயார் செய்து படைத்து, வருடா வருடம் கர்ம பலன்கள் தீர பிரார்த்தனை செய்து கொண்டு வருகிறோம். நாம் செய்த பாவங்கள் அத்தனையும் நம்மை மட்டும் அல்லாமல், நம் குலத்தையும் பாதிக்கும். நாம் செய்த பாவத்திற்கு, ஏதுமறியா நம் பிள்ளைகள் பாதிக்க கூடாது என்றால், குலதெய்வத்திற்கு கண்டிப்பாக சர்க்கரை பொங்கல் படைத்து வழிபட்டு அவரின் அருளை பெற்று வர வேண்டும் என்பது தான் நம் முன்னோர்களால் தெய்வீக ரகசியமாக சொல்லப்பட்டுள்ளது.



# தந்தையின் மகனும் நண்பர்களாகட்டும்!

பொதுவாக தந்தைகளின் இறுதிக் காலம் பெரும்பாலும் மௌனத்திலும், தனிமையிலும் சில சமயம் ஒதுக்கி வைக்கப்பட்டும், புறக்கணிப்பிலும் கழிய நேரிடுகிறது என்பது வருத்தத்துக்குரியது

இதனால் தான் தந்தைமார் தாம் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றும், முற்றாக ஓய்வு பெற்று மூலைக்கு செல்வதற்கு முன்னர் மரணித்து விட வேண்டும் என்றும் நினைக்கின்றனர்.

குடும்பத்துக்காக உழைத்து உழைத்து ஓடான பின்னர் அவரை கௌரவமாக வாழ வழி செய்ய வேண்டும்.

மூலையில் இருத்தி, மௌனத்தில் ஆழ்த்தி, மூன்று வேளையும் சாப்பிட்டு விட்டு பேசாமல் கிடந்தால் போதும்.... என்ற மனப்பான்மையுடன் தான் பல பிள்ளைகள் தந்தைமாரை நடத்தி வருகின்றனர்.

வயதான தந்தை தன் குடும்பத்தினரிடமிருந்து மிகக் கொஞ்சமாகத் தான் கேட்பார் ஏனெனில் கேட்டுப் பழகாத குடும்பத் தலைவராக இருந்தவர், கொடுக்க மட்டுமே தெரிந்து வைத்திருந்தவர்.

எனவே வயதான காலத்தில் வாய் திறந்து கேட்கமாட்டார். குடும்பத்தினர் தான் அவரின் தேவைகளை அறிந்து நிறைவேற்றி வைக்க வேண்டும். வாசிக்கும் பழக்கம் உள்ளவரானால், வாரப் பத்திரிகையாவது வாங்கிக் கொடுங்கள். சில்லறைச் செலவுகளுக்காக கொஞ்சம் பணமும் கொடுங்கள்.





மூலையில் அமர்த்தாமல் சிறிய வேலைகளைக் கொடுங்கள்.

பேரன் பேத்திகளை அவரிடம் இருந்து பிரிக்காதீர்கள். அவர்கள் தந்தையால் கொண்டாடப்படும் செல்வங்கள்.

குடும்பத் தேவைகளைப் பார்த்து பார்த்து செய்தவருக்கு, இப்போது உங்கள் காலம் பார்த்துப் பார்த்து செய்வதற்கு.

ஒருவர் மறைந்த பின்னர் அதைச் செய்யவில்லையே இதைச் செய்திருக்கலாமே என்று எண்ணிப் புலம்புவதை விட அவர் உயிருடன் இருக்கும் போதே அவரின் இறுதிகாலம் அமைதியாகக் கழிவதற்கு வழி வகை செய்யுங்கள்.

தன் மனைவியை இழந்த தந்தையின் தனிமை மிக மிகக் கொடுமையானது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு பெண் கணவனை இழந்தால் அவரால் அதை ஜீரணித்து தன் பிள்ளைகளுடன் போய்ச் சேர்ந்து கொள்வாள் பெண் சூழலுக்கு ஏற்றாற் போல வளைந்து கொடுத்து வாழ்பவள்.

ஆனால் குடும்பத் தலைவன் அதிகாரம் செலுத்தியவன், சம்பாதித்தவன், பிறர் மதிப்புக்குரியவன் என்றெல்லாம் வாழ்ந்து விட்ட தந்தை தன் அதிகாரமும், அன்பும், நெருக்கமும், காட்டக் கூடிய மற்றும் எது வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ளக் கூடிய மனைவியை இழந்த பின் கையறு நிலைக்கு ஆளாகி விடுகிறார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இவற்றை உணர்ந்து தந்தைக்கு மரியாதை செய்யுங்கள். அவர் கௌரவிக்கப்பட வேண்டியவர்.

ஒவ்வொரு மகனும், மகளும் படித்து உணர வேண்டிய பதிவு!

**தகவல்: வாணன்முத்தையா**

# தைரியம், நம்பிக்கை எப்போதும் வாழ்வில் தோற்காது!

பள்ளத்தாக்குகள் தான் உங்களைப் பக்குவப்படுத்தும். உதிர்ந்த இலை கூட அழகாகிறது. அன்போடு யாரேனும் எடுத்துப் பார்க்கையில்.

வாழ்வின் தொடக்கம் முதல் இன்று வரை நகர்ந்து கொண்டு இருக்கும் நாட்களில். ஒரு பெண் தனக்காக வாழ்ந்ததை விட தன்னைச் சுற்றி உள்ள உறவுகளுக்காக மட்டுமே வாழ்கிறாள்.


மனசுல சந்தோஷம் இருந்தால் தான். பண்டிகைகள் கூட மகிழ்ச்சியாகும். ஒரு யானைப் பாகன் தனக்கு100 ஏக்கர் நிலம் வேண்டும். 50 யானைகளுக்குச் சொந்தக்காரனாக வேண்டும், சுற்று வட்டாரத்தில் இல்லாத அளவுக்கு பெரிய வீடு கட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

அதற்காக இறைவனுக்கு பூஜைகள் மற்றும் பிரார்த்தனைகள் செய்ய ஆரம்பித்தான்.

பல நாட்கள் செய்த கடுமையான பூஜைகளின் பலனாக இறைவன் அவனுக்கு காட்சி கொடுத்து என்ன வரம் வேண்டும் எனக் கேட்டார். அவன் தன்னுடைய நீண்ட நாள் ஆசைகளை வரிசைப்படுத்தி அனைத்தும் வேண்டும் எனக் கேட்டான்.

இறைவனும் சிரித்தபடி 50 யானைகளை காட்டி இது போதுமா என்றார். அவன் மகிழ்ச்சியாக தலையாட்டினான்.

100 ஏக்கர் நிலத்தைக் காட்டி இது போதுமா என்றார் . அதற்கு அவன் நிலத்தில் இன்னும் நான்கு கிணறுகள் இருந்தால் நன்றாக இருக்கும் என்றான்.



பெரிய மாளிகையை காட்டினார். வீடு முழுவதும் தங்கம் மற்றும் நவரத்தினங்களால் அலங்கரித்து வேண்டும் என்றான். அவன் கேட்ட அனைத்தையும் கொடுத்த இறைவன் நீ எனக்கு ஒரு சிறு உதவி செய்ய வேண்டும் எனக் கேட்டார்.

நீங்கள் கொடுத்த அளவுக்கதிகமான செல்வம் என்னிடம் இருக்கிறது. என்னால் செய்ய முடியாதது இப்போது எதுவும் இல்லை. என்ன உதவி வேண்டும் நீங்கள் சொல்வதை செய்து முடிக்கிறேன் என்றான்.

நீ இறந்த பின் மேலே வரும்போது உன்னிடம் இருக்கும் யானையின் வாலின் முடியில் ஒன்றை மட்டும் வெட்டி எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் தர வேண்டும் என்றார். இதற்கு ஏன் சாகும்வரை காத்திருக்க வேண்டும் இப்போதே பிடுங்கித் தருகிறேன் என்றான்.

இல்லை இப்போது எனக்குத் தேவையில்லை என்றார் இறைவன்.

அதற்கு அவன் இறந்த பின் ஒரு துரும்பைக் கூட எங்கும் கொண்டு போக முடியாதல்லவா என்றான்.

பிறகு ஏன் உனக்கு இவ்வளவு பேராசை என்று இறைவன் கேட்க அவர் கொடுத்த அத்தனை சொத்துக்களையும் திருப்பி கடவுளிடமே கொடுத்துவிட்டு என்றும் அழியாத எங்கு சென்றாலும் தன்னுடன் வரக்கூடிய இறை அருளை சேர்க்க பூஜைகள் தானங்கள் தர்மங்கள் செய்வது எப்படி என்ற சிந்தனையுடன் நடக்க ஆரம்பித்தான் யானைப் பாகன்.

காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே.

– பட்டினத்தார்

சிகரங்கள் தன்னம்பிக்கையூட்டும். ஆனால் பள்ளத்தாக்குகள் தான் உங்களைப் பக்குவப்படுத்தும்.

காட்டுச் சிங்கமாக இருந்தாலும் படுத்து கிடக்காமல் ஓடினால் தான் பசிக்கு இரை கிடைக்கும். கட்டித் தங்கமாக இருந்தாலும் வெப்பம் தாங்கினால் தான் நகையாக மதிப்பு கிடைக்கும் மனித வாழ்வும் இப்படித் தான்.



எஸ்.சூர்யா

கஷ்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதை விட அதனை ஒரு கை பார்(அனுபவி)த்து விடுவதே மேல். தைரியம், மற்றும் நம்பிக்கை இருந்தால் அதன் முன் பணமும், படிப்பும் கூட தோற்று விடுகின்றன. நம் கஷ்டங்களை யாரும் வாங்கிக் கொள்ளப் போவதில்லை.பின் ஏன் நம் சந்தோஷங்களை திருட அனுமதிக்க வேண்டும்.

மரியாதை என்பது பெற்றோர்களிடத்தில் தலை குனிந்து வணங்குவதில் மட்டுமல்ல. அவர்களை தலைநிமிர்ந்து நடக்கச் செய்வதில் தான் இருக்கிறது.

# மலையளவு பெறுவதற்கு போராடு! கடுகளவு கிடைத்தாலும் கொண்டாடு!!



சிரித்துக்கொண்டே நகர்வதினால் வலிக்கவில்லை என்று அர்த்தம் இல்லை.

வலிகளை காட்டிக் கொள்ள விருப்பம் இல்லை என்று அர்த்தம்.

நிம்மதி வேண்டும் என்று தேடுகிறோமே தவிர ஆசைகளைக் கைவிட யாரும் நினைப்பதில்லை, ஆசைகளை விட்டுவிடுங்கள் நிம்மதி தானாகக் கிடைக்கும்.

மனிதனுக்கு ஆசை அவன் ஒழியுமட்டும் இருந்து கொண்டே இருக்கிறது.

மனிதன் ஆசாபாசங்களில் எளிதில் சிக்கி விடுகிறான்அது அவனை குலைத்துக் குன்றி விடுகிறது.

ஆசைகள் அற்ற இடத்தில், குற்றங்கள் அற்றுப் போகின்றன. பொறாமை, கோபம் எல்லேமே ஆசை பெற்றெடுத்த குழந்தைகள்தான்.



ஒருவரை குறை கூறும் முன் ஒரு முறை அவர்கள் சூழ்நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் என்று யோசித்து பாருங்கள், யாரையும் குறை சொல்ல தோன்றாது.

சந்தர்ப்பம் வரும் என வாளாவிருக்கக் கூடாது...

சந்திக்கும் நேரங்களைச் சந்தர்ப்பமாக மாற்றிக் கொள்ள வேண்டும்...!

ஒருவரின் மனதை திறந்து படிக்க நினைப்பதை விட உணர்ந்து படிக்க நினைத்தாலே போதும் அழகாய் புரிந்து விடும்.

அடுத்தவன் கஷ்டத்தில் இருந்தால் கவலைப் படு. அவனுக்கு உதவி செய். ஆனால் குறை சொல்லாதே கடன் வாங்குவதை தவிர்த்துக்கொள்ளுங்கள்..

அது இரவில் கவலையை உண்டாக்கும்..

பகலில் தலை குனிவை உண்டாக்கும்..

வாழ்க்கையில் மாற்றம் என்பது நினைத்தால் மட்டும் வராது. அதற்காக உழைத்தால் மட்டுமே வரும்.

- குணசுப்பிரமணி

# எம் பதில்கள்






**வைகோ மீண்டும் எம்.பி. ஆகாதது வருத்தமாக இருக்கிறதே?**

**பொன். வேலாயுதம். தொழுதாவூர்**

*1964 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா முன்னிலையில் சென்னை கோகலே மன்றத்தில் இந்தி எதிர்ப்புக் கருத்தரங்கத்தில் முதன் முதலில் பேசி தனது அரசியல் வாழ்வில் அடி எடுத்து வைத்தவர் வைகோ.*

*1970 25 வயதில்

கலிங்கப்பட்டி பஞ்சாயத்து தலைவர்

*1978 முதன்முதலாக மாநிலங்களவை உறுப்பினர்

*1984 இரண்டாவது முறையாக மாநிலங்களவை உறுப்பினர்

*1990 மூன்றாவது முறையாக மாநிலங்களவை உறுப்பினர்

*1998 பிப்ரவரி மாதம் சிவகாசி தொகுதியில் மக்களவை உறுப்பினர்

*1999 அக்டோபர் மாதம் இரண்டாவது முறையாக சிவகாசி தொகுதியில் மக்களவை உறுப்பினர்

*2019 2024 வரை நான்காவது முறையாக மாநிலங்களவை உறுப்பினர்.

தற்போது அவரது மகன் துரை .வைகோ திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர். இந்த நிலையில் வைகோ மீண்டும் எம்பி ஆக தேர்ந்தெடுக்கப்படாதது அவரது கட்சிக்காரர்களுக்கு வேண்டுமானால் வருத்தமாக இருக்கலாமே தவிர உண்மையைச் சொன்னால் வருத்தப்பட வேண்டிய அவசியமே இல்லை.

ஏனென்றால் இந்திரா காந்தி,ராஜீவ் காந்தி ,நரசிம்ம ராவ், தேவகவுடா, மன்மோகன் சிங் ஆகியோர் பிரதமர்களாக இருந்தபோது அவையில் கருத்துக்களை வலியுறுத்தி வேகமாக பேசியிருக்கிறார். மோடி பிரதமர் ஆனவுடன் "மோடியின் உருவில் அண்ணாவை பார்க்கிறேன்"என்றார்.

அவ்வளவு திறமை மிக்க வை.கோ சமீபத்தில் மாநிலங்களவையில் பேசும் பொழுது பா.ஜ.க.வை பார்த்து "உங்களால் தமிழ்நாட்டில் காலூன்ற முடியாது" என்று சொன்னார்.

அவர் சொன்னது பதவிக்கு வர முடியாது என்பதை குறிப்பிட்டு. ஆனால் நிர்மலா சீதாராமன் அவருக்கு பதில் சொல்வதாக நினைத்து நீங்கள் சொல்வது தவறு நீங்கள் சொல்வது தவறு என்று இரண்டு முறை சொல்லிவிட்டு தமிழ்நாட்டுக்கு யாரும் கால் வைக்க முடியாது என்று சொல்கிறீர்களா என்று கேட்டுவிட்டு மறுநாள் சென்னையில் எஸ் ஆர் எம் கல்லூரியில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற போது சமூக வலைதளத்தில் நான் கால் வைத்து விட்டேன் உன்னால் ஆனதை பார் என்று அவர் சொல்வதைப் போல வீடியோக்கள் வெளியானது.

கருத்தை கருத்தோடு பொருத்திப் பார்த்தவர்கள் அமர்ந்திருந்த அவையில் வைகோவின் பேச்சு கருத்தாகவே பார்க்கப்பட்டது ஆனால் அது மாறும் என்கிற போது வைகோ போகாமல் இருப்பது தான் நல்லது என்று நமக்கு தோன்றுகிறது. இதுவரை அவர் ஆற்றிய பணிகளுக்கு நம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!

**கமல் பேசிய பேச்சு சர்ச்சையாக இருக்கிறதே!**

**ப. பரந்தாமன், புதுவை**

முதன்முதலாக ராஜ்ய சபா எம்.பி.யாக கமல் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். முழு நேர அரசியல்வாதியாக மாற வேண்டிய கமலின் இந்த சூழலில் ஒரு சினிமா பட விழாவில் மொழி பிரச்சனை பேசி அண்டை மாநிலத்தோடு அது ஒரு விவாதமாக மாறி அங்கு உள்ளவர்கள் போர்க்கொடி தூக்கிக் கொண்டு வரும் அளவுக்கு நடந்தது வருத்தமே.



பொதுவாக நடிகர் கமல் பேசுவது சரியாக புரிந்து கொள்ள முடியாது என்று கேலி செய்பவர்கள் உண்டு. நீண்ட நாட்களாக பா.ஜ.கவை இன்றளவும் ஆதரித்து வரும் ரஜினிக்கு கிடைக்காத பதவி தி.மு.கவின் மூலம் கிடைத்திருக்கிறது. திராவிட இயக்கத்தின் மூலம் அந்த பதவி கிடைத்திருக்கிறது இன்று பெருமைப்படும் சூழலில் இப்படி ஒரு பேச்சு கமல் பேசியதாக வந்த செய்தி பரபரப்பு ஏற்படுத்தி இருக்கிறது.

"மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன், சிம்பு, த்ரிஷா உள்ளிட்டோர் நடித்துள்ள 'தக் லைஃப்' திரைப்படம் விரைவில் வெளியாகவுள்ளது. அந்தப் படத்தின் இசை வெளியீட்டு நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கன்னட நடிகர் சிவராஜ்குமார் பங்கேற்றிருந்தார்.

மேடையில் பேசிய கமல்ஹாசன், "ராஜ்குமாருடைய குடும்பம் அந்த ஊரில் இருக்கும் என்னுடைய குடும்பம். அதனால்தான் அவர் இங்கு வந்திருக்கிறார். அதனால்தான் என்னுடைய பேச்சை தொடங்கும்போது 'உயிரே உறவே தமிழே' என்று தொடங்கினேன். தமிழிலிருந்து பிறந்ததுதான் கன்னடம். அதை நீங்களும் ஒத்துக் கொள்வீர்கள்" என்று பேசியிருந்தார்.

**லாலு பிரசாத் எப்படி இருக்கிறார்!**

**பா. பாலாஜி, வேலூர்**

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை அகில இந்திய அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக இருந்தவர் லாலு பிரசாத் யாதவ்.

ரயில்வே துறை அமைச்சராக இருந்திருக்கிறார் அவருடைய மனைவியை பீகார் முதலமைச்சர் ஆக்கியிருக்கிறார். ஒன்பது பிள்ளைகளுக்கு தந்தையான இவருக்கு 80 வயது போகிறது. இவருடைய மகன் தேஜஸ்வி முன்னாள் துணை முதல்வர். மூத்த மகன் பீகார் மந்திரியாக இருந்திருக்கிறார்.

இப்படி குடும்பத்தோடு அரசியலில் கோலோச்சிய

லாலு பிரசாத் யாதவ்

தனது மகனை அடிப்படை உறுப்பினரிலிருந்து 9 ஆண்டுகளுக்கு கட்சியில் இருந்து நீக்கி வைத்திருக்கிறார். தமிழ்நாட்டில் நடந்த வரும் சம்பவத்தை நினைவூட்டும் விதமாக இது அமைந்திருக்கிறது.

தேஜ் பிரதாப் யாதவ் கட்சியிலும் குடும்பத்திலும் ஒரு அங்கமாக இருக்க மாட்டார் என லாலு பிரசாத் யாதவ் தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டார்

மூத்த மகனின் செயல்பாடுகள், பொது நடத்தை மற்றும் பொறுப்பற்ற செயல் ஆகியவை குடும்ப விழுமியங்கள் மற்றும் மரபுகளுக்கு ஏற்ப இல்லை. எனவே நான் அவரை கட்சியிலிருந்தும் குடும்பத்திலிருந்தும் வெளியேற்றுகிறேன். இனிமேல், அவருக்கு கட்சியிலும் குடும்பத்திலும் எந்தப் பங்கும் இருக்காது. அவர் கட்சியிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு நீக்கப்படுகிறார்" என்று லாலு பிரசாத் யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

# ஏன்? எதற்கு? எங்கே? எப்போது?

**– தமிழறிஞர் இறையரசன்**

**த**மிழ் மருத்துவம், சித்த மருத்துவம் என்னும் உலகின் தொல் மருத்துவத்தை ஆங்கிலத்தில் படிப்பது படிப்பிப்பது ஏன்?

சொல்லும் திறமை தமிழ் மொழிக்கு இல்லையா? இல்லையா?

உவேசா அவர்கள் திருவல்லிக்கேணியில் தம் ஆசிரியர் பெயரில் அமைந்த "தியாகராச விலாசம்" வீட்டில் இருந்தார்.

உலகப்போரின் போது....

"எம்டன்" என்ற செர்மானிய போர்க் கப்பலை ஓட்டி வந்த செண்பகராமன்பிள்ளை வெள்ளையனை மிரட்ட, மக்கள் பகுதியைத் தவிர்த்து, சென்னைக் கோட்டை அருகில் ஓர் குண்டைப் போட்டுவிட்டுப் போனார்.

அதனால், சென்னையர் பலர் வெளியூர் சென்றனர். உவேசா அவர்களும் திருக்கழுக்குன்றன்றம் உறவினர் வீட்டுக்குச் சென்று ஒரு மாதம் தங்கினார்.

உவேசா வீடு இடிக்கப்பட்டு விட்டது தெரியுமா?

பி.சா .சுப்பிரமணிய அய்யரை "பிசாசு" என்று சுருக்கக் கையெழுத்திட்டதால் "பிசாசு" என்றனர்.

உடனே ஆங்கிலத்தில் (PSS) என இட்டார்.

உவே சா அவர்கள் " உவேச்" என்றுதான்

கையெழுத்திடுவார்.

தாக்க வேண்டிய இலக்கைத் தாக்கி மீண்டும் கைக்கு வரும் "வலரி" "பூமராங்" எனப்படுகிறது. இது இப்போது நெல்லைப்பகுதியில் போர்க்கலையின் பெயராக மட்டும் உள்ளது.

அமரிக்கப்படை,பின்லேடன் இருந்த பாதாள






வீட்டை மட்டும் தாக்கி அழித்துவிட்டு,

பலலட்சம் மக்களை உயிருடன் விட்டுச் சென்றது.

இங்கு.....

மனைவி மக்களை மட்டுமல்ல ....

குழந்தை பாலசந்திரனையும் கொன்ற உலக மகா போர்க் கொடுமையை ஒப்பிட்டு நினைக்கும் போது நெஞ்சு வலிக்கிறது !

கப்பல் கட்டுமரம் கலம் பரிசல் (பரிசு = பாரிசு) என்ற தமிழ்ச் சொற்கள் உலகம் முழுதும் உள்ளன.

ஓர் கப்பலுக்கு இராசேந்திர சோழனின் பெயர் வைக்கப்பட்டு நீக்கப்பட்டது தெரியுமா?

தஞ்சை சென்னை தொடரிக்கு வைக்கப்பட்டிருந்த

"சோழன் " என்ற பெயர் பதிவுகளில் நீக்கப்பட்டது தெரியுமா?

கூத்தனூர் (ஒட்டக்கூத்தர் ஊர்) கோயில் "கலைவாணி கோயில்" ஏன் "சரஸ்வதி கோயில்" என்று மாற்றி எழுதப்பட்டது ஏன்? ஏன்?

தஞ்சைப் பெருவுடையார் திருக்கற்றளி எனும் "பெரிய கோயில்" எனும் பெயரை "பிரகதீஸ்வரர் கோயில்" என்று மாற்றி எழுதியது ஏன்? ஏன்?

# 'படி' என்ற சொல்லுக்கு எழுத்தாளர் சுஜாதா தரும் விளக்கம்!




அலுவலகங்களில் கடிதம் எழுதும்போது ஒருவருக்கு மேல் அந்தக் கடிதம் போய்ச் சேர வேண்டுமானால் 'R.R' (c.c.) என்கிற சுருக்கத்தைப் பயன்படுத்துகிறோம். இந்த 'R.R' என்பது என்ன என்று நான் பலமுறை வியந்திருக்கிறேன்.

வில்லியம் ஸஃபைரின் 'Take my word for it' (என் வார்த்தையைக் கேளுங்கள்) என்கிற புத்தகத்தைப் படித்தபோதுதான் 'R.R' என்பது கார்பன் காப்பி என்பதன் சுருக்கம் என்று தெரிந்தது. இன்றைய நாட்களில் ஜெராக்ஸ் போன்றவை வந்தபின்னும் 'R.R' போகவில்லை.

இன்டர்நெட்டில்கூட இமெயில் எழுதும்போது கடிதத்தின் பிரதி மற்றொரு விலாசத்துக்கும் போகவேண்டும் என்றால் 'ஸி.ஸி' யைப் பயன்படுத்துகிறார்கள்.தமிழில் அதற்கு 'படி' என்கிற வார்த்தை சரியானது.

படி என்பது தமிழில் மிக முக்கியமான சொல். அதற்கு சுமார் நாற்பது அல்லது ஐம்பது சொற் பொருள்கள் இருக்கின்றன. தூசி படிகிறது என்கிறோம். அடியாத மாடு படியாது எனும்போது வசமாதலைச் சொல்கிறோம். பாடம் படி, ஏன் பாட்டுப்படி என்றுகூட தென்மாவட்டங்களில் சொல்கிறோம்.

'எழுத்துப் படிந்திருக்கிறது' எனும்போது 'கையெழுத்து திருத்தியமைந்திருக்கிறது' என்று அர்த்தம். கீழ்ப்படிதல் பற்றி நம் அனைவருக்கும் தெரியும். திருவாசகத்தில் களித்தலுக்கு 'தடங்கடலிற் படிவாம்' என்று பிரயோகம் உள்ளது.



பாரம் வைத்தால் தைத்த இலை படியும் எனும்போது அமுங்குதல். வெள்ளம் படிந்தது எனும்போது அது தணிதல். இவையெல்லாம் intransitive வகை வினைச்சொற்கள். transitive வகையிலும் பல படிகள் உள்ளன. புத்தகம் படிப்பது. இதில் படி என்பதற்கு சொல்லுதல், துதித்தல், பழகுதல் என்றெல்லாம் பொருள் உண்டு. பெயர்ச்சொல்லாக மாடிப்படி, முதற்படிதன்மை; தராசின் படிக்கல், நித்தியப்படி, பஞ்சப்படி, என்று இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

அப்படி, இப்படி, எப்படி, வரும்படி, போகும்படி, நினைத்தபடி, நடந்தபடி எனும்போதெல்லாம் படியின் எத்தனையோ விஸ்தாரங்கள் கிடைக்கின்றன. அவற்றில் நாம் விரும்பும்படி, பிரதியெடுத்தல் பொருள்பட, ஒத்த பிரதி என்கிற அர்த்தத்தில்..

'கிழித்த ஓலை படியோலை' என்று பெரிய புராணத்தில் வருகிறது. படியெடுத்தல் என்பது 'விக்கிரகத்துக்குப் படியெடுத்தது போலே' என்று குரு பரம்பரையிலும் 'படியெடுத்துரைத்துக் காட்டும் படித்தன்று படிவம்' என்று கம்பராமாயணத்திலும் வருகிறது.

இதிலிருந்து கிளைத்தெழும் படிமம் என்கிற அருமையான வார்த்தை பிரதிமை, பிம்பம், உதாரணம், வடிவம், தவவேடம், விரதம், சன்னதம், முகம் பார்க்கும் கண்ணாடி என்று விரிகிறது. விமர்சகர்கள் 'metaphor' என்கிற வார்த்தைக்கு ஈடாக 'படிமம்' பயன்படுத்துகிறார்கள்.

'படி' என்று ஒரு சிறிய வார்த்தை தான் எத்தனை எத்தனை சிறப்பானது. தமிழில் கலைச்சொற்கள் அமைக்கமுடியாது என்று சொல்பவர்களை *படிக்கூண்டிலிருந்து படித்துறையில் உருட்டித் தள்ளும்படி வேண்டுகிறேன்.

# உலகமே அலைபேசி கையில்!



**அ**லைபேசிக்கு கொஞ்சம் ஓய்வு கொடுத்து பாருங்கள் உங்கள் நிலை பற்றி யோசிக்க தோன்றும்.

அலைபேசியின் அருகாமையை தவிருங்கள் அருகில் உள்ள உறவுகளின் அருமை புரியும்.

அலைபேசியை கொஞ்சம் அணைத்திடுங்கள் உங்கள் அனைத்து நடவடிக்கையும் இயல்பாய் ஆகும்...

காணொளியை தவிர்த்து விடுங்கள் கண்ணொளியை காத்திடுங்கள்.

கை பேசியை தூக்கி எறியுங்கள்

காக்கை குருவிகள் வாழட்டும்.

ஓடியாடி விளையாடுங்கள் ஓய்வெடுக்கட்டும் அலைபேசி! .






எஸ்.ஜானகி

ஆடி பாடி மகிழுங்கள்

ஆரோக்கியம் செழிக்கட்டும்.

வலைதள பயன்பாடு

விலை போகும் நிலைப்பாடு.

கவலை தீர்க்காத கைபேசி

கலகத்தை உண்டாக்கும் நீ யோசி...

உள்ளங்கையில் உலகம் என உவகை கொள்ளாதே.. இல்லமே உலகம் உதறி தள்ளாதே. புலனம் வழியே புலன் விசாரித்தது போதும்... சலனம் கொண்டு கவனம் சிதறியது போதும்...

புவனம் ஆள வேண்டிய புதினம் நீ

பயன்பாட்டு பொருள் உன்னை பயன்படுத்தி தூக்கி எறியும்.

உருப்படியை பற்றி கொள்ளாதே உருப்பட வாய்ப்பு இல்லை...

உயிருள்ள நீ உணர்வற்று போவாய் செயலிகளால் நீ செயலற்று போவாய்...

அலைபேசியை கொஞ்சம் அடக்கம் செய்யேன்.. உன்னை அடக்கி ஆள்வது அது மட்டுமே...

கைபேசியை கொஞ்சம் கைவிட்டு பாரேன்... கையூன்றி என்னோடு எழுந்து வாயேன்!

# ஒவ்வொரு நொடியும் அழகானது! உறவுகளோடு ஒன்றி வாழ்வோம்!!



இரண்டு நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒருவர் சொன்னார், "கேரளாவில் ஒரு இடம் இருக்கிறது, அது ஒரு டீ எஸ்டேட், அங்கு செல்ஃபோன் வேலை செய்யாது, நாம் அங்கே போய்விட்டால் வெளி உலகை விட்டு முற்றிலும் துண்டிக்கப் படுவோம்,

இங்கே இருக்கும் 'டென்ஷன்' எல்லாம் குறைக்க, அங்கே போய் ஒரு மூன்று நாள் இருக்கலாம் போல இருக்கிறது.

வெளி உலகத் தொடர்பே அற்று, நிம்மதியாக இருக்கலாம்"என்றார்.

ஒருவர் சொன்னார், "எனக்கு இது சரிப்பட்டு வராது. இதை நான் விரும்புவதும் இல்லை" என்றார்.

அதற்கான காரணத்தைச் சொல்கிறார்..

நம்மைச் சுற்றி இருப்பவர்கள் யார்? யார்?

முதலில் மனைவி.

பிறகு பிள்ளைகள்.

அடுத்து உறவுகள்.

பின், நண்பர்கள்.

பின்பு வேலையின் நிமித்தம் தொடர்பில் உள்ளவர்கள்.

அதன்பின் முற்றிலும் தெரியாதவர்கள். அதாவது, கடைவீதியில் நடப்பவர்கள் போல, அறிமுகம் இல்லாதவர்கள்.

இந்த உறவுகள் அற்புதமானவை. மனைவி என்ற ஒருத்தியோடு பேசிக் கொண்டே இருங்கள், இல்லாவிட்டால் ஏதாவது சண்டையாவது போடுங்கள். பின்பு சமாதானம் ஆகி உறவாடுங்கள்.

எல்லாருக்கும் ஒரு நாள் வரும்.

அப்போது தெரியும், பிரிவு என்றால் என்னவென்று.

ஆகவே இப்போது கிடைக்கும் ஒவ்வொரு நொடியும் அற்புதமானவை, வீணாக்க வேண்டாம். அதிலும் பிரிந்து இருக்கவே வேண்டாம். அடுத்து, பிள்ளைகள், பள்ளிப் படிப்பு முடியும் வரைதான் அவர்கள்

உங்களோடு இருப்பார்கள். அதன்பின் அவர்கள் உலகம் வேறு, அதில் நீங்கள் நிச்சயமாய் இருக்கவே மாட்டீர்கள். அப்போது நீங்கள்

அவர்களோடு தொலைபேசி மூலமாக பேசக்கூட நேரம் பார்க்க வேண்டும்.

இப்போது அவர்களிடம் அதிக நேரம் செலவு செய்யுங்கள்.

வெளிநாட்டில் தனது சின்னக் குழந்தைகளைப் பிரிந்து பணி செய்யும் தகப்பன்மார்களுக்கு இந்த வேதனை புரியும்.

இப்படி இல்லாமல், உங்கள் பிள்ளைகள் உங்கள் அருகிலேயே இருந்தால் இது அற்புதமான தருணம். ஒரு நொடியைக்கூட வீணாக்க வேண்டாம். சும்மா அவர்களை பார்த்துக் கொண்டாவது இருங்கள்.

அடுத்து உறவுகளும், உடன் பணி செய்யும் தோழர்களும்.

இதைப்பற்றி தெரிந்து கொள்ள, நீங்கள் அடுத்த மாநிலத்திலோ அல்லது வேறு நாட்டிலோ இருந்தால்,

இது புரியும். வட நாட்டில் இருந்தால் அங்கு உள்ள சர்மாவும், பாண்டேயும், தூபேயும், நம்மோடு நட்பாக இருப்பார்கள். ஆனால் தோள் மேல் கைபோட்டு "வாடா மாப்பிளே" என்று கூற முடியாது. ஒரு இடைவெளி இருந்து கொண்டேதான் இருக்கும்.

எல்லாம் ஒரே இடத்தில் கிடைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களே!

வாழ்கையை ருசியுங்கள்; அனுபவியுங்கள்.

காலமே ஒரு நாள் நம்மை தனிமைப்படுத்தப் போகிறது. அன்று யாரும் நம்மை வந்து பார்க்கப்போவது இல்லை.

நாம் நினைத்தால் கூட வெளியே போக முடியாது. தனிமையே நம்மை கொல்லப்போகிறது.

அதுவரை, கடவுள் நமக்குத் தந்த சினேகங்களோடு பேசுவோம்; சண்டையிடுவோம். கொஞ்சிக் குலாவுவோம், ஏதாவது செய்வோம்.

ஆனால் தனிமை வேண்டாம்,

அது மோசமானது.

காலங்கள் திரும்பக் கிடைக்காது!

- **T.M. ரவிச்சந்திரன்**


# மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

பத்தாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

| |
|---|
| **ஆயுள்சந்தா : ரூ.2400.00** |
| **ஆறாண்டு சந்தா : ரூ.1440.00** |
| **ஆண்டு சந்தா : ரூ.240.00** |

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |

மேலும் விபரங்களுக்கு: **044-23743007/8**

# illam
**PREMIUM RETIREMENT HERITAGE VILLAS**

A UNIT OF THE CHENNAI HOMES







"Illam", traditional name for "House" is our latest Project of Premium Heritage Villas for the generation who defy the conventional notions of senior living and wish for a complete life.

There are five different stages of life:
1. Child 2. Adult 3. Teenage 4. Middle age 5. Old age
At each stage of our lives we are independent and experience a lot of things - We get sad, happy, angry, egoistic, loving, affectionate and a plethora of so many other emotions.

Our prior commitments in our lives enable us to take care of our kids, give them quality education, buy a home of our choice, and the list goes on. Once our to-do list of commitments are done with, we look forward to spend quality time and invest in ourselves by taking care of our health and fitness - both physically and mentally. After 45, we look towards retirement.

We enable this transition by creating an opportunity for you to form a loving community where everyone is on the same wavelength, where you don't need to worry about mundane tasks needed to take care of yourselves.

We the pioneers of The Chennai Homes retirement community are launching our new project at Mahabalipuram called **"Illam"**- a community of premium retirement heritage villas. We are dedicated to bring forth only the best quality of life through our retirement homes.

I'm proud to present **"Illam"** at Mahabalipuram, in close proximity to Chennai, with infrastructure like hospitals, schools, leisure areas and restaurants.

At 45, this will be your place to rediscover yourself by enabling you to experience quality time at our Heritage villas with lush landscaping and all required facilities.

So come enjoy and rediscover yourself. **We promise you golden years of life after 45 at Illam.**

*Jayashree Menon*

DIRECTOR, THE CHENNAI HOMES

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2025-2027
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2025-2027
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 June 2025

illam
PREMIUM RETIREMENT
HERITAGE VILLAS
A UNIT OF THE CHENNAI HOMES











Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY